

# பணிதல் மறந்தவர்

894.811.17
OAN

ஒடுக்குமுறைக்கு எதிரான
மூன்றாம் உலகக் கவிதைகள்

சி.சிவசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பெண் T 894.811 17 ஈட்டலெண் 460800

## இலங்கைப் பல்கலைக்கழக நூலகம்

பேராதனை.

### இரவல் பெறுவோருக்கு அறிவித்தல்

இந்நூல் பல்கலைக்கழக நூலகத்தினது உடைமை. நூலக இரவல் விதிகளுக்குப் புறம்பாக, இதனை இசைவாணையின்றி வைத்திருத்தல் பாரதூரமான குற்றமாகும். நூல்கள் கையேட்டிலுள்ள இரவல் பெறுவதற்கான நியதிகளையும், சட்டங்களையும் செவ்வனே பின்பற்றுமாறு இரவல் பெறுவோர் கேட்கப்படுகின்றனர்,

நூல்களை துப்புரவாகவும்,ஒற்றைகளை மடிக்காமலும், பென்சிலால் வரையாமலும், மற்றும் முறைகளில் குறியீடுகள் செய்யாமலும் வைத்துக்கொள்ளுமாறு தயவாகக் கேட்கிறோம் திருப்பித்தரும் நூல்களின் நிலைமைக்கு வாசகர்களே பொறுப்பு ஆதலினால், இரவல் பெற முன்னர், நூலில் உள்ள ஊறுகளை அவர்கள் முகப்பு மேசையிலுள்ள நூலகத் துணைவர்களுக்குச் சுட்டிக்காட்டி விட வேண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
11-7-1995
LIBRARY

460800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிதல் மறந்தவர்

## ஒடுக்குமுறைக்கு எதிரான மூன்றாம் உலகக் கவிதைகள்

தமிழில் :

**சி. சிவசேகரம்**

460800

சவுத் ஏசியன் புக்ஸ்

SAB

தேசிய கலை இலக்கியப் பேரவை

460800

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Panithal Maranthavar
A Collection of Poems from the
Third world against oppression
Translated by S. Sivasekaram
First Published : August 1993
Printed at : Suriya Achagam, Madras.
Published in Association with
National Art & Literary Association
by
South Asian Books
6/1, Thayar Sahib II Lane
Madras-600 002
Rs. 12.00

Cover : 'Good and Bad Angels' by
William Blake (1757 - 1827)

பணிதல் மறந்தவர்
ஒடுக்குமுறைக்கு எதிரான
மூன்றாம் உலகக் கவிதைகள்
தமிழில் : சி. சிவசேகரம்
முதற்பதிப்பு : ஆகஸ்ட் 1993
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை-17
வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவையுடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார்சாகிப் 2ஆவது சந்து,
சென்னை-600 002.
ரூ. 12.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
11-7-1995
LIBRARY

"சிறந்த மாக்சிய சிந்தனையாளரும்
சர்வதேசியவாதியுமான
திரு. மு. கார்த்திகேசன்
நினைவுக்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஏகாதிபத்தியம், மூன்றாம் உலக நாடுகளில் தனது நவகொலனித்துவப் பிடியைப் பலப்படுத்துவதற்காக அம்மக்களின் மௌனப் பண்பாட்டைப் பயன்படுத்தி பணிதலை ஏற்றும் உலகமாக மாற்றிவிடப் பகீரதப் பிரயத்தனம் எடுக்கிறது.

மாறாக, மனித வரலாற்றில் 'பணிதல் மறந்தவர்' பலரது வாழ்வுப் பணிகளே மாற்றுப் பண்பாட்டு நெறிகளாக மாறி வருகின்றன.

சமகால வாழ்வில் விழுமியங்கள் வீழ்ச்சி பெற்றுள்ளன. பெறுமதிமிக்க மனித உயிர்கள் அழிவதும், தொலைந்து போவதும் வெறும் கணக்கெடுப்பாகவும், சத்தியக் கூற்றுக் (affidavits) கோவைகளாக ஆவணப் படுத்துவதாகவும் மட்டுமே கணிக்கப்பட்டு அமைதி காணும்போக்கு தலைதூக்கியுள்ளது. இவை தற்காலிக நிலைகளே.

மேலாக, நாட்டுக்குழைத்திடவும், நலம் ஓங்கிடுமாறு வருந்திடவும் 'போரிட நின்றிடும் போதும் உளம் பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞான'த்தைக் கண்டிடவும் பயன்படத்தக்கவகையில் பல்நாட்டுக் கவிஞர்களின் வாழும் கவிதைகளை கவிஞர் சிவசேகரம் மொழி பெயர்த்து வழங்கியிருக்கிறார். தமிழ் கவிதையுலகினை இந்நூல் மேலும் அணிசெய்யும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் சி. சிவசேகரம் அவர்களுடைய செப்பனிட்ட படிமங்கள், தேவி எழுந்தாள் ஆகிய கவிதை நூல்களின் வரிசையில் இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

இந்நூல் வெளியீட்டிலும் எம்முடன் தொடர்ந்து இணைந்துழைக்கும் திரு. எம். பாலாஜி அவர்களுக்கும் நண்பர்கள் வீ. திவ்வியராஜா, உமாபதி ஆகியோர்க்கும் அச்சகர் சங்கரனுக்கும் ஊழியர்களுக்கும் எமது நன்றிகள்.

இந்நூல்பற்றிய ஆக்கபூர்வ விமர்சனங்களை விருப்போடு எதிர்பார்க்கிறோம்.

தேசிய கலை இலக்கியப் பேரவை
14, 57வது ஒழுங்கை,
கொழும்பு-06 - இலங்கை
06-07-1993

UNIVERSITY OF PERADENIYA
11-7-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


கவிதைகளும் கவிஞர்களும் பிறவும் 9

1. பேட்டோல்ற் ப்றெஷ்ற்
(Bertolt Brecht, ஹிற்லர் ஆட்சியில் வெளியேறிய ஜேர்மனியர்)

ஜேர்மன் பாடல் 15
மலட்டுத்தனம் பற்றி 16
வன்முறை பற்றி 16
எனக்கு இடங்கொடுத்தவன் 17
சில்லை மாற்றுதல் 17
ஐக்கிய முன்னணிப் பாட்டு 18
ஐக்கியத்துக்கான பாட்டு 19

2. எரிஷ் ஃப்றீட்
(Erich Fried, ஒஸ்ற்றிய நாட்டினின்று புலம்பெயர்ந்தவர்)

இழந்த சொர்க்கம் 20
மீண்டும் சிலே (Chile) 21
மீளல் 22
நிபுணர்கள் 23
வாய்திறக்கும் சுதந்திரம் 23
பழக்கப்படல் 25
30 வருஷம் கழித்து 25
புரட்சி 26




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மிரொஸ்லாவ் ஹொலுப்
(Miroslav Holub, செக் தேசத்தவர்)

| | |
|---|---|
| கதவு | 27 |
| ஆசிரியர் | 28 |
| கோமாளிகள் | 29 |
| உதவுங்கரம் | 29 |
| ஆர்க்கிமிடிஸைக் கொன்ற கோப்பரல் | 30 |
| இறந்த மொழியில் ஒரு பாடநூல் | 31 |
| நெப்போலியன் | 32 |

4. பேணிஸ் ஜோன்ஸன் ரேகொன்
(Bernis Johnson Regon)

| | |
|---|---|
| அதே கரங்கள் | 33 |

5. பப்லோ நெரூடா
(Pablo Neruda,
சிலே தேசத்தவர்)

| | |
|---|---|
| பாறையிலோர் உருவப்படம் | 34 |

6. ஏர்னெஸ்ற்றோ கர்தினால்
(Ernesto Cardinal,
நிகாரகுவா தேசத்தவர்)

| | |
|---|---|
| 57வது தோத்திரம் | 36 |
| மார்க்கச்சுக்களின் விலை | 38 |
| 5வது தோத்திரம் | 39 |

7. மரியா யூஜெனியா ப்ராவோ
(Maria Eugenia Bravo,
சிலே நாட்டவர் இப்போது
இங்கிலாந்தில் உள்ளார்)

| | |
|---|---|
| புகலிடங்களும் தோல்விகளும் பற்றி | 41 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஹோர்ஹெ ஸல்காடோ றோச்சா
(Jorge Salgado Rocha,
சிலே நாட்டவர் இங்கிலாந்தில் வாழ்கிறார்)
செப்டெம்பர் நாலாந் திகதி 43

9. அல்ஃப்ரெடோ கொர்டால்
(Alfredo Cordal,
சிலே நாட்டவர். இங்கிலாந்தில் வாழ்கிறார்)
நமது மக்கள் 45

10. மஹ்மூத் தர்வீஷ்
(Mahmud Darwish, பாலஸ்தீனத்தவர்)
அலையும் கிற்றார் இசைஞன் 46
தூரத்து இலையுதிர் காலத்தில்
ஒரு மழைத்தூறல் 48

11. ஸமி அல் கஸிம்
(Samih-al-Qasim, பாலஸ்தீனத்தவர்)
கைவிடல் 50
பிரயாணச் சீட்டுக்கள் 51
நண்பகலில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் 51
கிழிந்த உதடுகள் 52
ஒரு நகரின் கதை 52
நான் ஒரு பண்டமான விதம் 52
போரின் மைந்தர் 53
சுவர்க் கடிகாரம் 53
பரதேசத்தில் மரிக்கும்
ஒருவனது மரணசாசனம் 54
சோங்கதிருக்கும் ஜெருஸலெம்
ரோஜாமுள்ளுக்குமிடையிலான
உரையாடல் 55

UNIVERSITY OF PERADENIYA LIBRARY
11-7-1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 அடோனிஸ் (Adonis,
ஸிரியா நாட்டவர், லெபனானில் வாழ்கிறார்)

கோபுரம் 57
அக்கினி விருட்சம் 57
பறவை 58
இலையுதிர்காலத்திற்கு ஒரு கண்ணாடி 58
இருபதாம் நூற்றாண்டுக்கு
ஒரு கண்ணாடி 59
தூக்கிலிடுவோனுக்கு ஒரு கண்ணாடி 59
கவலைகள் (ஒரு சொப்பணம்) 60
பொற்காலம் 60

13. முஹம்மத் அல்-மகூத்
(Mnhammad al-Magut, ஸிரியா தேசத்தவர்)

அனாதை 61
விண்வெளி நிலையமொன்றில்
ஒரு அரபுப் பயணி 62
தபாற்காரனின் அச்சம் 63

14. இஸாம் மஹ்ஃபூஸ்,
(Issam Mahfouz, லெபனான் தேசத்தவர்)

முடிவு 64

15. உன்ஸி அல்-ஹஜ்
(Unsi Al-Haj, லெபனான் தேசத்தவர்)

நினைவு 65
நாட்களும் ராட்சதரும் 65
குளிர்காலம் 66

16. கலில் ஹாவி (Khalil Hawi,
லெபனான் தேசத்தவர்)

லெபனான் 67



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. ஸமி மஹ்தி
(Sami Mahdi, ஈராக் தேசத்தவர்)
பெய்ரூத் 68

18. ஸலாஃநியாஸி (Sala Niazi
ஈராக் தேசத்தவர், லண்டனில் வாழ்கிறார்)

மூன்றாமுலகம் 69

19. தௌஃபிக் ஸய்யாட்
(Thowfik Zayyad, பலஸ்தீனத்தவர்)

கவசவாகனங்கட்கு முன்னம் 70
அவர்கள் அறிவார்கள் 71
ஸல்மான் 71
இங்கேயே இருப்போம் 72

20. ஸா'டி யூஸூஃப்
(Saa' di Yusuf, ஈராக் நாட்டவர்,
இப்போது சைப்ரஸில் வாழ்கிறார்).

நீர் 73
புனர்ஜென்மம் 74
துப்பாக்கிகள் 74
ஹம்ரா இரவு 75

21. வொலே ஸொயின்கா
(Wole Soyinka, நைஜீரியா தேசத்தவர்)

மூலதனம் 76

22. டெனிஸ் ப்றூட்டஸ்
(Denis Brutus, தென் ஆப்பிரிக்கர்]

எது முக்கியமானதென்றால்... 77
சிறைவாசம் 78
இராப் பாடல் நகரம் 80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. அகொஷ்தின்ஹோ நேற்றோ
(Agostinho Neto,
அங்கோலா தேசத்தவர்)

மேலை நாகரிகம் 81
இரவு ¿2

24. ஜே. ஆர். டி. ஏ. டுப்றேகா
(J.R.D.A. Duprega)

ஐரோப்பியரே போய் வருக 83

25. அமின் கஸ்ஸாம்
(Amin Khassam, கென்யா தேசத்தவர்)

உருமாற்றம் 84

26. ஸிஃபோ ஸெம்பம்லா
(Sipho Sepamla, தென்னாபிரிக்கர்)

தீர்ப்புத் தினத்தன்று 86
நாகரிகம், ஆஹா! 88

27. ஃபீலிக்ஸ் ம்ன்தாலி
(Felix Mnthali,
ஸிம்பாப்வே தேசத்தவர்)

நவகொலனித்துவம் 89

28. க்றிஸ் ஃபான் வைக்
(Chris Van Wyk,
தென்னாபிரிக்கர்)

காரணம் 91
வோட்டும் வேட்டும் 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. ஷோர்ஜி றெபலோ
(Jorgi Rebalo,
மொஸாம்பிக் நாட்டவர்)

தம்பி, வா எனக்குன்
வாழ்க்கையைச் சொல் 93

30. ஓமர் பா
(Omar Ba,
மொரிட்டானியா தேசத்தவர்)

நீதி வழங்கப்படுகிறது 95
பழக்கமான மாடுகள் 96
மாட்டுப் படைவீரன் 96

31. கெயொராபெற்ஸே க்கோஸிற்ஸே
(Keorapetse Kgositse,
தென் ஆபிரிக்கர்)

மண்டேலாவின் போதனையுரை 97

32. காஓபெர்டியானோ டம்பரா
(Kaoberdiano Dambara,
கினி தேசத்தவர்)

கறுப்பனின் தீர்ப்பு 98

33. ஒஸ் வால்ட் ம்புயிஸெனி ம்ட்ஷாலி
(Oswald Mbuyiseni Mtashi,
தென் ஆபிரிக்கர்)

துணி துவைக்கும் பெண்ணின்
பிரார்த்தனை 99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. கத்தார்
(தெலுங்குக் கவிஞர்)

லஷ்மம்மா 100

35. மாஓ சேதுங்
(Mao Zedung, சீனா)

ஒரு கவிதை 102

36. ஃபெங் ஷிஏ ஃபெங்
(Feng Zie-Feng, சீனா)

இரவு 104



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகளும் கவிஞர்களும் பிறவும்

1974-75 அளவில் "கண்டி கலாச்சாரக் குழு" பிரசுரித்த "நதி" என்ற சிற்றேட்டுக்காகச் சில சீனக் கவிதைகளை (ஆங்கில மூலம்) தமிழ்ப்படுத்தியதுதான் என் கவிதை மொழிபெயர்ப்பின் தொடக்கமென நினைக்கிறேன். அதையடுத்து மாஓ சேதுங், ஹோசிமின் கவிதைகள் சிலவற்றைத் தமிழ்ப்படுத்தினேன். பின்னை யவை பிரசுரத்திற்குக் கொடுக்கப்பட்டவிடத்துத் தொலைக்கப்பட்டன. 1976இல் மாஓ சேதுங் கவிதைத் தொகுதியைத் தமிழாக்கும் முயற்சியில் ஈடுபட்ட காலத்தில் அவரது மரணம் நிகழ்ந்ததால், கண்டி கலாச்சாரக் குழு நண்பர்கள் கவிதைகளைத் தமிழாக்கி வெளியிடுவதிற் காட்டிய பெரும் ஆர்வம் என் தமிழாக்கத்தைத் துரிதப் படுத்தியது. இதன் விளைவாக, மொழி பெயர்ப்பிற் சில குறைபாடுகள் ஏற்பட்டன. இதன் பின்னர், வேறு சில சீனக் கவிதைகளையும் தமிழ்ப்படுத்தினேன். இவற்றுள் 1976க்குப்பின் கைக்கெட்டிய மாஓ சேதுங் கவிதைகள் இரண்டும் அடங்கும். இதைவிட, கவிஞர் ஸ்ரீ. ஸ்ரீயின் தெலுங்குக் கவிதையொன்றன் மட்டரகமான ஆங்கில மொழிபெயர்ப்பின் அண்ணளவான தமிழாக்கம் ஒன்றை யும் செய்தேன். இது என் விருப்பத்தை மீறிப் பின்னர் "அலை" என்ற சஞ்சிகையிற் பிரசுரமாயிற்று. இக் கவிதையின் தழுவல், "புதிய பூமி" என்ற தலைப்பில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வெளியிட்ட 'புதிய பூமி' பத்திரிகைக்கு வாழ்த்துப் பாடலாக அனுப்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இக்காலக்கட்டத்திற் தற்செயலாகக் கைக்கெட்டிய ஓரிரு கவிதைகளைத் தமிழாக்கித் தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடான "தாயகம்" சஞ்சிகைக்கு அனுப்பினேன்.

அயல்மொழிக் கவிதைகளைத் தமிழாக்கும் ஆர்வம் அப்போது எனக்கு அதிகமாக இருக்கவில்லை என்றே நினைக்கிறேன். இக் காலகட்டத்தில் ஐரோப்பியத் தமிழ் சஞ்சிகைகளுடனான பரிச்சயம் ஏற்பட்டது. 1989 முதல் நிறைய எழுதும் நிர்ப்பந்தத்துக்கு என்னை ஆளாக்கிக் கொண்டேனோ தெரியாது எவ்வாறோ, ஐரோப்பியத் தமிழ்ச் சிறு சஞ்சிகைகளிலும் கனேடிய சஞ்சிகைகளிலும் அதிகம் எழுதும் நிலைமை ஏற்பட்டது. அதேவேளை, தமிழ்க் கவிதை படும்பாட்டைப் பார்க்கப் பரிதாபமாகவும் இருந்தது. கவிதைகளுடன் பரிச்சயம் போதாமலும் கவிதை பற்றிய அறிவே இல்லாமலும், விடுதலை, புரட்சி என்றெல்லாம் நினைத்துக் குழப்பியடித்தும் வந்த படைப்புக்களை விமர்சித்து அதிகம் ஆகாது என்று தோன்றியது. சில ஆபிரிக்கக் கவிதைகளைத் தமிழ்ப் படுத்திப் பிரசுரிக்கும் எண்ணம் மனதில் எழுந்தது. இவற்றையடுத்துச் சில அரபுக் கவிதைகளைத் தமிழ்ப் படுத்தினேன். சில அற்புதமான கவிஞர்களின் ஆக்கங்கள் தற்செயலாகவே கைக்கெட்டின. சஞ்சிகைகளில் இவற்றின் தமிழாக்கங்கட்கு ஓரளவு வரவேற்பிருந்தது. இதன் விளைவாக இந்த மூன்று வருட இடைவெளியில் நூற்றுக்கதிகமான சிறு கவிதைகளைத் தமிழாக்க நேர்ந்தது.

இக்காலகட்டத்திற் செய்த தமிழாக்கங்கட்கும் 1976-1983 இடைவெளியிற் செய்தவற்றுக்கும் தன்மையிற் கணிசமான வேறுபாடு உண்டு. புதுக்கவிதை பற்றிய என் அனுபவ வாயிலான உணர்வின் விருத்தி இதற்கு ஒரு முக்கிய காரணம். மாஓ சேதுங் கவிதைகளையும் ஹோ சி மின் கவிதைகளையும் முதலிற் தமிழ்ப்படுத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, நான் மரபு சார்ந்த ஒரு சந்த அமைதியைப் பேண ஓரளவு விருப்பங் கொண்டிருந்தேன். இப்போது பேச்சின் சந்தத்தை வசதியானபடி பயன்படுத்திக் கொள்கிறேன். என் கவிதைகளில் மட்டும் இடையிடையே மரபு சார்ந்த சந்த வடிவங்கள் பயன்படுகின்றன.

மொழி பெயர்ப்புக்காகத் தெரிந்தெடுத்த கவிதைகள் என் கைக்கெட்டிய நூல்களுக்குள் வரையறைப்பட்டவை. எந்தவொரு கவிஞரதும் குறிப்பிட்டதொரு கவிதையைத் தேடிப் பெறும் வசதியோ வாய்ப்போ எனக்கு அதிக மில்லை. கைக்கெட்டிய எல்லா நல்ல கவிதைகளையும், தமிழாக்கும் ஆர்வமும் எனக்கிருக்கவில்லை என் தெரிவுகள், முக்கியமாக அரசியற்-சமுதாய நோக்கின் அடிப் படையிலானவை. இத்தொகுதியில் உள்ளடக்கப்பட்ட கவிதைகள் யாவும் ஒடுக்கலுக்கெதிரான குரல்களின் வெவ்வேறு வடிவங்கள் அவற்றிற் சிறந்த கவித்துவம் இருக்கிறது. அவை ஆங்கில வாயிலாக வந்து தமிழாகும் போக்கில், இரண்டு மொழி பெயர்ப்பாளர்களது குறை பாடுகளையும் மீறித் தரமான கவிதைகளாக இருக்கின்ற வாயின், அது, என் ஆற்றலை விட, மூலத்தைப் படைத்தவரது ஆற்றலின் காரணமானது. இம்மொழி பெயர்ப்புக்கள் ஒடுக்கலுக்கு உட்பட்ட சமுதாயங் களினின்று கொலனித்துவம், ஏகாதிபத்தியம், ஸியோ னிஸம் என்பனவற்றுக்கு எதிராக எழும் குரல்களின் தமிழ் வடிவங்கள். இங்கு மூன்றாமுலகின் கவிஞர்களல் லாத ஒருவர் ஜேர்மனி தந்த நாடகாசிரியர் பேட்டோல்ற் ப்ரெஷ்ற். இன்னொருவர் ஜேர்மன் பேரினவாதத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராகக் குரல் கொடுக்கும் ஒஸ்ற்றியரான எரிஷ் ஃப்றீட். இவர்களிருவரும் தமது சொந்த நாடுகளை அரசியற் காரணங்கட்காக நீங்கியவர் கள். மிரொஸ்லாவ் ஹொலுப் செக் தேசிய இனத்தவர். சோவியத் மேலாதிக்கத்தின் கீழிருந்த செக்கோஸ்லவாக் கியாவில் அவர் வாழ்ந்தார். அவரது கவிதைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படும் விடுதலை உணர்வு கொஞ்சம் வேறுபட்ட தாயினும் நம்மாற் பகிரக்கூடிய ஒன்று. பேணிஸ் ரைஸ் ஜோன்ஸன் அமெரிக்க நீக்ரோ பாடலாசிரியராக இருக்க வேண்டும். அவர் பற்றிய போதிய தகவல்கள் கிடைக்க வில்லை.

அரபுக் கவிஞர்களுள் நன்கறியப்பட்டவர் மஹ்மூத் தர்வீஷ். இவரதும் பிற பலஸ்தீனக் கவிஞர்களதும் கவிதைகளை ஈழத்தின் சமகாலக் கவிஞர்களில் முக்கிய மான ஒருவரான நுஃமான் தமிழாக்கியுள்ளாரென அறிவேன். அவரது தமிழாக்கங்கள் என் கைக்கு இது வரை கிடைக்கவில்லை. நேரத்துடன் கிடைத்திருப்பின் தற்செயலாக நிகழந்திருக்கக்கூடிய இரட்டிப்பைத் தவிர்த் திருப்பேன். லண்டனில் வாழும் தமிழக எழுத்தாளர் யமுனா ராஜேந்திரனின் முயற்சியில், தர்வீஷின் கவிதை கள் இருபத்தைந்து, தமிழில் ஒரு தொகுதியாக வரவுள் ளன. இதில் என் தமிழாக்கங்கள் சில உள்ளடக்குகின்றன. அவற்றுள் ஒன்றை இத்தொகுதியிற் சேர்த்துள்ளேன். அடோனிஸ், ஸமி அல்-கஸிம், முஹம்மத் அல்-மகுத் ஆகியோரும் நன்கறியப்பட்ட அரபுக் கவிஞர்கள். நான் கண்ட அரபுக் கவிதைத்தொகுதிகளின் கவிஞர்கள் பற்றிய விரிவான குறிப்புக்கள் இருந்தன. ஆயினும்இத்தொகுதியில் எல்லோரையும் பற்றி ஒப்பிடத்தக்க விதமாகக் குறிப்புக் களைத் தர இயலாமையால், சொந்த நாடு தவிர்ந்த வேறு விவரங்கள் தரப்படவில்லை.

ஆபிரிக்கக் கவிதைகள் என்று பொதுமைப்படுத்துவது கவிஞர்களின் படைப்பைப் புரிந்து கொள்ள அதிகம் உதவாது. வெவ்வேறு நாடுகளின் கவிஞர்கள் வேறுபட்ட கொலனித்துவ ஆதிக்கங்கட்கு ஆளாகியுள்ளனர். ஒவ்வொரு தேசிய இனமும் தனக்குரிய கலாச்சார வரலாற்றுப் பின்னணியை உடையது. வர்க்க சமுதாயத் தின் விருத்தி ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது. மிகக் கொடுமையான இனவெறிக்கும் ஒடுக்கலுக்கும் உட்பட்ட தென்ஆபிரிக்காவும் விடுதலைக்காக நெடுங்காலம் போராடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட மொஸாம்பிக்கும் அங்கோலாவும் தந்த கவிஞர்கள் கூடுதலான போராட்ட உணர்வைக் காட்டுகிறார்கள். இங்கு இடம்பெறும் (தென் ஆபிரிக்காவின்) டெனிஸ் ப்ரூட்டஸ், (நொபெல் பரிசு பெற்ற நைஜீரியக் கவிஞர்) வொலே ஸொயின்கா, (அங்கோலாவின் காலஞ்சென்ற ஜனாதிபதி) அகொஷ்தின்ஹோ நேற்றோ போன்றோர் தம் தேசிய எல்லைகட்கு வெளியே நன்கு அறியப்பட்டோர்.

லத்தின் அமெரிக்கக் கவிதைத் தொகுதிகள் என எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. புலம்பெயர்ந்து லண்டனில் வாழும் லத்தின் அமெரிக்கக் கவிஞர்கள் சிலரது கவிதைகளைக் கொண்ட ஒரு தொகுதியும் நிக்கராகுவா தந்த சிறந்த கவிஞர் எந்னெஸ்றோ கர்தினாலின் கவிதைத் தொகுதியொன்றும் சிலே தந்த உலகப்புகழ்பெற்ற கவிஞரான பப்லோ நெரூடாவின் கவிதைகளின் தொகுதியொன்றும் கிடைத்தன.

கரிபியன் நாடுகளினதும் அரபு நாடுகள் தவிர்ந்த ஆசிய நாடுகளதும் கவிதைகளும் கைகெட்டவில்லை எனலாம். முன்பு மொழிபெயர்த்த சீனக் கவிதைகள் இரண்டும் தற்செயலாகத் தமிழாக்க நேர்ந்த கத்தாரின் தெலுங்குக் கவிதையும் இத் தொகுதியில் உள்ளன. இந்தியக் கவிதைகள் பெருமளவுக்கும் தமிழர்களை வெவ்வெறு வழிகளில் எட்டியிருக்கும் என்பதும் நல்ல மொழிபெயர்ப்பாளரான கே. கணேஷ் வியற்னாமியக் கவிதைகளைத் தமிழாக்கியிருக்கிறார் என்பதும் மனதுக்கு ஆறுதல் தரும் விஷயங்கள்.

கைக்கெட்டிய சில நல்ல கவிதைகள் அவற்றைத் திருப்திகரமாகத் தமிழாக்க அவகாசம் இல்லாது தமிழாக்கப்படவில்லை. வேறுசில, விரிவான விளக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளின்றித் தமிழிற் புரிந்து கொள்ளக் கடினமானவை என்பதாற் தவிர்க்கப்பட்டன. ஒரு வகையில், இத் தொகுதியில் உள்ள பெருவாரியான கவிதைகள் இன ஒடுக்கலுக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டலுக்கும் ஒடுக்குதலுக்கும் உட்பட்ட எந்தச் சமுதாயத்தினரும் எளிதாக உறவு கொள்ளக் கூடியவை என்றே நினைக்கிறேன் நான் தவறவிட்டவற்றை என்னிலுஞ் சிறப்பாக வேறெவரையாவது செய்வதற்கு இத் தொகுதி தூண்டி விடக்கூடுமாயின் அதுவே எனக்குத் திருப்திதருவதாகும்.

என் தமிழாக்கங்களைப் பிரசுரித்து ஊக்குவித்த (ஒல்லாந்து நாட்டின்) அஆஇ, (பிரான்ஸின்) ஓசை, [நோர்வேயின்) சுவடுகள், (ஜேர்மனியின்) புதுமை, (இங்கிலாந்தின்) பனிமலர். (இலங்கையின்) தாயகம், அலை ஆகிய சஞ்சிகைகட்கும் (கனடாவின்) தாயகம், (பிரான்ஸின்) பாரிஸ் முரசு, (இங்கிலாந்தின்) தமிழோசை, (இலங்கையின்) புதிய பூமி ஆகிய பத்திரிகைகட்கும் என் நன்றி.

இவை நூல்வடிவம்பெறக் காரணமாயிருந்த தேசிய கலை இலக்கியப் பேரவையினருக்கும் சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்தினருக்கும் விசேஷமாக, இலங்கையின் இன்றைய நிலவரங்களுள் இலக்கியப் பணியிற் தளராது நிற்கும் நண்பர்கட்கும் என் நன்றி

*1993* மே *23*, லண்டன் — சி. சிவசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

## பேட்டோல்ற் ப்றெஷ்ற்

(Bertolt Brecht)
(ஹிற்லர் ஆட்சியில்
வெளியேறிய ஜேர்மனியர்)

UNIVERSITY OF PERADENIYA
11-7-1995
LIBRARY

### ஜேர்மன் பாடல்

புதுயுகம் பிறக்குமென்று சொல்லுகின்றனர்
(அனா, அழாதே)
அடகுவைக்கப் பொருள்கள் இன்னுங் கையில் உள்ளன
கீர்த்தி மீண்டும் இங்கு எம்மைச் சூழவுள்ளது
(அனா, அழாதே)
பெட்டகத்துள் பார்த்து விட்டேன் எதுவுமில்லையே
மேலும் வெற்றி வருகுமென்று சொல்லுகின்றனர்
(அனா, அழாதே)
வராத ஒன்று உறுதியாக நம்முன் உள்ளதே
தாக்குதல் தொடங்கி விட்டோம் மீளுவேன் எனில்
(அனா, அழாதே)
மற்றவர்ணக் கொடியின்கீழே நான் திரும்புவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலட்டுத்தனம் பற்றி

கனிதராத மரத்தை
மலடு என்கிறார்...
மண்ணை எவர் பரிசோதித்தார்?

முறிந்து விழுந்த கிளை
உக்கியது என்கிறார். ஆனால்
அதன் மேற் பனி கிடக்கவில்லையா?

## வன்முறை பற்றி

சிறிப் பாயும் ஆறு முரட்டுத்தனமானது என்கிறார்
அதை ஒடுக்க முனையும் ஆற்றுப் படுக்கையை
எவரும் முரட்டுத்தனமானது என்கிலார்

பேர்ச் மரக்கிளைகளை வளைக்குஞ் சூறையை
முரட்டுத்தனமானது என்று சொல்கிறார்
நெடுஞ்சாலைத் தொழிலாளரின் முதுகை வளைக்கும்
சூறையை என்ன சொல்வோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்கு இடங் கொடுத்தவன்

எனக்கு இடங் கொடுத்தவன்
தனது வீட்டை இழந்தான்
எனக்காக இசை மீட்டியவன்
தனது வாத்தியத்தை இழந்தான்

சாவைக் கொணர்பவன் என
என்னை அவன் சொல்வானா,
அல்லது
தன் உடைமை அத்தனையும்
பறித்தவரைச் சொல்வானா?

## சில்லை மாற்றுதல்

தெருவோரம் அமர்ந்திருக்கிறேன்
சாரதி சில்லை மாற்றுகிறான்
இருந்த இடத்தையும் நான் விரும்பவில்லை
போகிற இடத்தையும் நான் விரும்பவில்லை
அவன் சில்லை மாற்றுவதை மட்டும்
நான் ஏன் பொறுமையின்றிக் கவனிக்கிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய முன்னணிப் பாட்டு

மனிதன் மனிதன் என்பதனால்
உணவை அவனும் கேட்கிறான்
வெற்றுப் பேச்சுச் சோறாமோ
பானை அதனால் நிறைவாமோ

இடது, இரண்டு, மூன்று, ஏய்
இடது, இரண்டு, மூன்று, ஏய்
தோழா உனக்கோர் இடமுண்டு
உழைப்போர் ஐக்கிய அணியில் நில்
நீயும் இன்னொரு உழைப்பாளி

மனிதன் மனிதன் என்பதனால்
முகத்தில் அறைந்தால் மனந் தளரான்
தன்கீழ் அடிமைகள் தமை வேண்டான்
தன்மேல் ஆண்டைகள் தமை வேண்டான்

இடது, இரண்டு, மூன்று, ஏய்
இடது, இரண்டு, மூன்று, ஏய்
தோழா உனக்கோர் இடமுண்டு
உழைப்போர் ஐக்கிய அணியில் நில்
நீயும் இன்னொரு உழைப்பாளி

உழைப்போர் உழைப்போர் என்பதனால்
விடுதலை வேற்றார் தரமாட்டார்
தொழிலாளர்களின் விடுதலையும்
தொழிலாளர்களின் பணியே தான்

இடது, இரண்டு, மூன்று, ஏய்
இடது, இரண்டு, மூன்று, ஏய்
தோழா உனக்கோர் இடமுண்டு
உழைப்போர் ஐக்கிய அணியில் நில்
நீயும் இன்னொரு உழைப்பாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கியத்துக்கான பாட்டு

உலகில் வாழும் மனிதர் நீவிர் ஒன்று சேருவீர்
பொதுமையான பாதைகாண வந்து கூடுவீர்
என்றும் உங்கள் பசியை நீக்கும் உலகுசெய்குவீர்
இன்று அதனை உமது ஆக்க உறுதி செய்குவீர்.

முன்னே முன்னே மறவீர் நீவிர்
எங்கள் வலிமை எங்கே என்றே
பசித்திடும் போதும் புசித்திடும் போதும்
முன்னே முன்னே மறவீர் நீவீர்
எங்கள் ஐக்கியம் எங்கள் ஐக்கியம்

கருமை வெண்மை பழுப்பு மஞ்சல் சகல வண்ணரும்
பழைய சண்டை பேதம் யாவும் தூர வீசுவீர்
கூடவாழும் மனிதரோடு பேசுவீரெனின்
சிந்தை ஒன்று கொண்ட மாந்தராக மாறுவீர்.

(முன்னே)

நாங்கள் இதனை உறுதி செய்ய வேண்டு மாதலால்
நாங்கள் உங்கள் உதவி தன்னை நாடிநிற்கிறோம்.
உங்கள் போன்ற மாந்தரோடு மாறுபட்டிடில்
உறுதியாக உம்மை நீவிர் உதறித் தள்ளுவீர்.

(முன்னே)

கூறுசெய்து நம்மை மூடர் ஆக மாற்றவும்
என்றும் எங்கள் முதுகில் ஏறி மேலிருக்கவும்
எங்கள் பேதம் ஓய்தலின்றித் தொடருமென்பதே
எம்மை ஆளும் கொடிய கும்பல் நெஞ்சின் ஆசையே

(முன்னே)

உலகமெங்கும் வாழுகின்ற உழைக்கும் மாந்தரே
ஒன்று சேர்க உங்கள் கைவிலங்கிழக்கவே
மிஞ்சிடாது கொடியராட்சி முடிவு கண்டிட
வலிய பெரிய படைகள் இன்று மோதுகின்றன.

(முன்னே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிஷ் ஃப்றீட்

(Erich Fried,
ஒஸ்ற்றிய நாட்டினின்று
புலம்பெயர்ந்தவர்)

### இழந்த சொர்க்கம்

எனது முதலாவது நாட்டை
இழந்து
எனது இரண்டாவது நாட்டிலும்
எனது புகலிடத்திலும்
எனது மூன்றாவது நாட்டிலும்
எனது இரண்டாவது புகலிடத்திலும்
அனைத்தையும் இழந்த பின்

எந்த நினைவுகளாலும்
ஈடுசெய்ய முடியாத இழப்புக்களாலும்
நஞ்சூட்டப்பட முடியாத
ஒரு மண்ணைத் தேடிப்
புறப்பட்டேன்

ஒருவாறு
சொர்க்கத்தை அடைந்தேன்
அங்கு அமைதியைக் கண்டேன்
யாவுமே பூரணமாயும் நன்றாயும் இருந்தன
எனக்கு எதிலுங் குறைவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது
ஒளிரும் வாளுடன்
ஒரு காவலாள் சொன்னான்:
"இங்கிருந்து போய் விடு
இங்கு நீ எதையும் இழக்கவில்லை"

## மீண்டும் சிலே (Chile)

சிலே பற்றிப் பேசுகின்றனர்
சிலே பற்றி மோனிக்கின்றனர்

சிலே பற்றிப் பேசுவோர்
சிலே பற்றி மோனிப்போரை
வெறுக்கின்றனர்

சிலே பற்றி மோனிப்போர்
சிலே பற்றிப் பேசுவோரை
வெறுக்கின்றனர்

சிலே பற்றிய பேச்சு
சிலே பற்றிய மோனத்திற்
தொலைந்து விடுகிறது

சிலே பற்றிய மோனம்
சிலே பற்றிய பேச்சிற்
தொலைந்து விடுகிறது

சிலேயிற்
காலம் கழிகிறது
கழியாமலும் இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீளல்

(அற்றிக்கா அரச சிறைச்சாலை,
நியூயோக், ஐக்கிய அமெரிக்கா)

அற்றிக்காச் சிறைக்குள்
அரசின் பொலிஸ் வந்து
துவக்காற் சுடுவதற்கு
ஒன்பது மாதங்கள் முன்
சிறைச்சாலை மருத்துவர்கள்

ஸ்பானிஷ் மட்டுமே தெரிந்த
*புவேர்ட்டொரிக்கன் நோயாளிகளிடம்
சொன்னார்கள்:

“முதலில் ஆங்கிலம் படியுங்கள்
பிறகு நீங்கள் திரும்பி வரலாம்”

இறந்த பின்பு
ஆங்கிலங் கற்பது
கடினம்
ஆனாலும்
அவர்கள் மீண்டும் வருவது
உறுதி

* Puerto Rica



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிபுணர்கள்

சந்தர்ப்பவாதிகளே
சந்தர்ப்பவாதத்தை
இழிவு செய்யுஞ்
சந்தர்ப்பங்கள் உண்டு

அவர்கள் சொல்வதை நம்புங்கள்
ஏனெனில் அவர்களே
எவரினும் மேலாகத்
தாம் சொல்வது என்னவென அறிவார்கள்

அவர்களை நம்பாதீர்கள்
ஏனெனில் அவர்கள்
சந்தர்ப்பவாதத்தின் காரணமாகவே
சந்தர்ப்பவாதத்தை இழிவு செய்கிறார்கள்

## வாய் திறக்கும் சுதந்திரம்

"அவர்கள் வாயை மூடச் செய்கின்றனர்"
என்று சிலர் சொன்னாலும்
வாயைத் திறக்கும் சுதந்திரம்
இருக்கவே இருக்கிறது.

அவர்கள் சொல்வதற்கு மாறாக
மூடித் தெரிகின்ற
வாய்களால் வருபவற்றின்
பட்டியல் ஒன்றைப் போட்டுப் பாருங்கள்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக ஓலங்கள்,
இரண்டாவதாகத் தொடக்கத்திலும்
சிலவேளை முடிவிலும்
இன்னமும் வரும் எதிர்ப்புக்கள்,

மூன்றாவதாகப் பற்கள், நான்காவதாக ரத்தம்,
ஐந்தாவதாக வாந்தி, ஆறாவதாகப்
பெரும்பாலும்
குழாய்களூடும் தலையை அமிழ்த்தியும்
புகுத்தப்பட்ட திரவங்கள்.
குறுகிய மனமுடையோராய் இராதீர்கள்,
ஏனெனில் வாய்திறக்கும் சுதந்திரம்
எல்லாருக்கும் ஒரே விதமானதல்ல.
உதாரணமாக, சிறைக்காவலர்கள்
ஒரு கைதியின்
பிடிவாதமான வாயைத் திறப்பது
அதற்குள் என்ன போகிறது?
நிறைய எண்ணெய் அல்லது நிறையைத் தண்ணீர்
அல்லது ஒரு சப்பாத்தின் குதிப்பாகம்
அல்லது மூத்திரம் அல்லது ரத்தமூறிய துணி
அல்லது மலம்
அல்லது மரத்தூள் அல்லது மண்
எல்லாமே ஒழுங்காகப் போனால்
வெளியே வருவது
சுயமாகவே தந்த ஒப்புதல் வாக்கு மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழக்கப் படல்

நேற்று நான்
பேசக் கற்கத் தொடங்கினேன்
இன்று மௌனங் கற்கிறேன்
நாளை கற்பதை நிறுத்துவேன்

UNIVERSITY OF PERADENIYA
11-7-1995
LIBRARY

## 30 வருஷம் கழித்து

கவனமெதுவுமின்றி
நினைவு கூரத்
தொடங்கினேன்

மேலுங் கவனமாக
அவர்கள் என்னை
மறக்கத் தொடங்கினர்

ப—2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
460800

# புரட்சி

அவள் தன் குழந்தைகளை விழுங்குகிறாள்
தன் மரித்தோரின் குருதியைப் பருகுகிறாள்
செவிடருக்கு உபதேசிக்கிறாள்
உயரிய விதியென எதையும் அறியாள்

தன் வழியை மறக்கிறாள்
துரோகத்தினின்று துரோகத்துக்கும்
பிழையினின்று பிழைக்கும் தடுமாறுகிறாள்
தன் தோல்விகளிற் துயில்கிறாள்

அவள் தேவையற்றவள் என்றே
பள்ளியில் ஒவ்வொரு குழந்தையுங் கற்கிறது
மக்கள் அவளை வேண்டவில்லை என்று
மக்கள் இறுதியாய் உணர்ந்து விட்டனர்

அவளால் வெல்ல இயலாதென
ஒன்றுக்குப் பத்து முறை நிரூபணமாயிற்று
நிரூபணத்தை வழங்கியவர்கட்கு
நல்ல நித்திரையில்லை

அவளை நம்புகிறவர்கள்
பெரும்பாலும் ஐயுற்று அலுக்கின்றனர்
அவளை வெறுக்கும் ஒரு சிலரே
அவள் வருவாள் என்று அறிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## மிரோஸ்லாவ் ஹொலுப்

(Miroslav Holub)
(செக் தேசத்தவர்)

### கதவு

போ, கதவைத் திற
ஒருவேளை வெளியில் அங்கே
ஒரு மரமோ வனமோ
தோட்டமோ
ஒரு மாய நகரமோ இருக்கலாம்

போ, கதவைத்திற
ஒரு வேளை நாயொன்று கிளறிக்
கொண்டிருக்கலாம்
ஒரு வேளை நீ ஒரு முகத்தையோ
விழியையோ
ஒரு படத்தின்
படத்தையோ காணலாம்

போ, கதவைத் திற
மூடுபனி இருந்தால்
அது விலகி விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போ, கதவைத்திற
அங்கே இருள் மட்டுமே
ஒலித்துக் கொண்டிருந்தாலும்
வெறிதான காற்று
மட்டுமே இருந்தாலும்
அங்கு
எதுவுமே
இல்லாது போனாலும்
போ, கதவைத்திற

குறைந்தது
காற்றேனும்
வரக்கூடும்

## ஆசிரியர்

'பூமி சுழல்கிறது' என்கிறார் மாணவர்
'அப்படியில்லை, பூமி சுழல்கிறது' என்கிறார் ஆசிரியர்

'மலைகள் பசுமையாகின்றன' என்கிறார் மாணவர்
'அப்படியில்லை, மலைகள் பசுமையாகின்றன'
என்கிறார் ஆசிரியர்

'ஈரிரண்டு நான்கு' என்கிறார் மாணவர்
'அப்படியில்லை, ஈரிரண்டு நான்கு' என்று
திருத்துகிறார் ஆசிரியர்
ஏனென்றால், ஆசிரியருக்கே அதிகம் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோமாளிகள்

கோமாளிகள் எங்கே போவார்கள்?

கோமாளிகள் எங்கே தூங்குவார்கள்?

கோமாளிகள் என்ன உண்பார்கள்?

ஒருவர் தவறாமல்
ஒருவருமே
இனிமேற் சிரியார்களாயின்
கோமாளிகள் என்ன செய்வார்கள்,

அம்மா?

## உதவுங்கரம்

புல்லுக்குக் கை கொடுத்தோம்
அது சோளமாகியது
நெருப்புக்குக் கை கொடுத்தோம்
அது வாணமாகியது
தயங்கித் தயங்கிக்
கவனமாக
மனிதருக்குச்
சில
மனிதருக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்க்கிமிடிஸைக் கொன்ற கோப்பரல்

துணிகரமான ஒரே வீச்சில்
வட்டத்தையும் தொடலியையும்
முடிவிலியிற்
சமாந்தரங்களின் வெட்டுப்புள்ளியையுங்
கொன்றான்

உடல் கூறு போடப்படும்
என்ற தண்டனை விதித்து
மூன்றுக்கும் மேற்பட்ட
இலக்கங்களைத் தடை செய்தான்

இப்போது ஸைரகூஸில்
மெய்யியலாளர் கல்விக் கூடத்தின்
தலைவனாகத்
தன்போர்வாள் மீது
இன்னுமோராயிரம் வருடங்
குந்தியமர்ந்து
எழுதுகிறான்:

ஒன்று இரண்டு
ஒன்று இரண்டு
ஒன்று இரண்டு
ஒன்று இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த மொழியில் ஒரு பாட நூல்

இது ஒரு சிறுவன்
இது ஒரு சிறுமி

சிறுவன் ஒரு நாய் வைத்திருக்கிறான்
சிறுமி ஒரு பூனை வைத்திருக்கிறாள்

நாய் என்ன நிறம்?
பூனை என்ன நிறம்?

சிறுவனுஞ் சிறுமியும்
ஒரு பந்துடன் விளையாடுகிறார்கள்

பந்து எங்கே உருளுகிறது?

சிறுவன் எங்கே புதைக்கப்பட்டிருக்கிறான்?
சிறுமி எங்கே புதைக்கப்பட்டிருக்கிறாள்?

வாசித்து
ஒவ்வொரு மொழியிலும்
ஒவ்வொரு மௌனத்திலும் மொழிபெயர்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெப்போலியன்

பிள்ளைகாள்
நெப்போலியன் பொனபார்ட் எப்போது பிறந்தான்
என்று கேட்கிறார் ஆசிரியர்

ஆயிரம் ஆண்டுகள் முன்பு என்றனர் பிள்ளைகள்
நூறு ஆண்டுகள் முன்பு என்றனர் பிள்ளைகள்
சென்ற ஆண்டு என்றனர் பிள்ளைகள்
எவருமே அறியார்

பிள்ளைகாள்
நெப்போலியன் பொனபார்ட் என்ன செய்தான்
என்று கேட்கிறார் ஆசிரியர்

ஒரு போரை வென்றான் என்றனர் பிள்ளைகள்
ஒரு போரைத் தோற்றான் என்றனர் பிள்ளைகள்
எவருமே அறியார்

எங்கள் கசாப்புக் கடைக்காரரிடம்
நெப்போலியன் என்றொரு நாய் இருந்தது
கசாப்புக் கடைக்காரர் அதை அடிப்பார்
ஒரு ஆண்டு முன்னர் அது
பட்டினியாற் செத்தது
என்றான் ஃப்றான்ற்றிக்ஷெக்

இப்போது எல்லாப் பிள்ளைகளும்
நெப்போலியனுக்காக வருந்துகின்றனர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# பேணிஸ் ஜோன்ஸன் ரேகோன்
(Bernis Johnson Regon)

## அதே கரங்கள்

சிலி,
நின் நீர்ப் பெருக்குகள்
சொவேற்றோவூடு சிவப்பாய்ப் பாய்கின்றன

சிலி பற்றி நீ கேள்விப்பட்டிருந்தால்
சொவேற்றோ பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறாய்
அங்கு ஒடுக்குமுறையின் இரத்த ஆறு
சுரங்கங்களின் ஆழத்துக்குப் பாய்கிறது

அயென்டே.யின் ஜீவனை நெரித்த
அதே கரங்கள்
சொவேற்றாவின் சேறுபடிந்த தெருவொன்றில்
குழந்தைகள் மீது துப்பாக்கி விசையை அழுத்தின

வில்மிங்றன் சிறையின் பத்துக் கூண்டுகளிற்
சாவிகளைத் திருப்பிய கைகளே
இளம் ஸ்ரீவ் மிச்செலைத்
தூசு அடர்ந்த மலைச்சாரற் புதைகுழியிலிட்டன

சிலி,
நின் நீர்ப்பெருக்குகள்
சொவேற்றோவூடு சிவப்பாய்ப் பாய்கின்றன
அதே கரங்கள்
அதே நீர்ப்பெருக்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# பப்லோ நெருடா

(Pablo Neruda)
(சிலே தேசத்தவர்)

## பாறையிலோர் உருவப்படம்

ஓ, அவனை நன்றாக அறிவேன்
அவனுடனும் அவனுடைய தங்கமான
        உறுதியான தன்மையுடனும்
வருடக் கணக்கிற் பழகியிருக்கிறேன்
அவன் களைப்புற்ற ஒரு மனிதன்
தன் தந்தை, தாய்
தன் மக்கள், மருமக்கள்
கடைசியாக வந்த சம்பந்திகள்
தன் வீடு, கோழிகள்
பாதி திறந்த சில புத்தகங்கள்
அனைத்தையும் பரஹுவாயில்* விட்டு வந்தவன்
அவனை வாசலுக்கு அழைத்தனர்
கதவைத் திறந்ததும்
        அவனைப் பொலீசார் கொண்டு சென்றனர்
அவர்கள் அவனை உதைத்த உதையில்

---

* Paraguay தேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சிலும் டென்மார்க்கிலும் ஸ்பெயினிலும்
இத்தாலியிலும்
திரிந்தபோது இரத்தங் கக்கினான்
அவன் இறந்து போனான்
அவன் முகத்தைக் காண்பதை நான் நிறுத்தினேன்
அவனது உன்னதமான மௌனத்தை நான் கேட்பது
முடிவடைந்தது
திடீரென ஒரு நாள்
வெண்பனி பரவக் கடுமையாகக் காற்றடித்த
ஒரு இரவில்
மென்மையான போர்வை மூட மலை மீது
குதிரை மேல் அமர்ந்து, அங்கே
நெடுந்தொலைவை நோக்கினேன்
அங்கே என் நண்பன்—
அவனது முகம் கல்லில் உருவாகியிருந்தது
அவனது உருவம்
கொடிய பருவநிலைக்குப் பணிய மறுத்தது
அவனது நாசியிற்
காற்று
அல்லலுக்காளானோரின் முனகல்களைத் திணித்தது
நாடு கடத்தப்பட்டவன்
அங்கு தரைக்கு வந்தான்
கல்லாய்ச் சமைந்து
தன் தாய்நாட்டில் வாழ்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏர்னெஸ்ற்றோ கர்தினால்

(Ernesto Cardinal)

(நிகாரகுவா தேசத்தவர்)

## 57வது தோத்திரம்

சட்டத்தினதும் ஒழுங்கினதும் காவலர்களே
உங்களது சட்டம் ஒரு வர்க்கத்தினரின்
சார்பானதில்லையா?
தனியார் உடைமை காக்க குடிசார் சட்டம்
ஒடுக்கப்பட்டோரை வதைக்கக் குற்றச் சட்டம்
நீங்கள் கூறுஞ் சுதந்திரம் மூலதனத்தின் சுதந்திரம்
உங்கள் 'சுதந்திர உலகம்' சுதந்திரமான சுரண்டல்
உங்கள் சட்டம் துப்பாக்கியின் சட்டம், உங்கள் ஒழுங்கு
ஒரு காடு
பொலிஸார் உங்களுடையோர்
நீதவான்கள் உங்களுடையோர்
சிறைகளிலே பெருங் காணிக்காரரோ வங்கி
உரிமையாளர்களோ இல்லை
முதலாளிகள் தம் தாயின் கருப்பையிலேயே தவறாகிப்
போகிறார்கள்
பிறந்த நாள் முதலே வர்க்க முற்சாய்வுடையோராகிறார்
கள்
புடையன் பாம்பு விஷச் சுரப்பியுடன் பிறக்கிறது
பெரிய சுறா மனிதரைத் தின்னவே பிறக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ தேவனே இந்த நிலைமைக்கு ஒரு முடிவு காட்டும்
ஆளுங் கும்பலின் பற்களைப் பிடுங்கும்
மலசல கூடத்து நீர்போல அவர்களைக் கழுவித் தள்ளும்
பூச்சிக்கொல்லியின் கீழுள்ள புல்போல அவர்கள்
வதங்கட்டும்
புரட்சி வரும்போது அவர்களே புழுக்கள்† ஆவார்கள்
அவர்கள் உடலின் உயிர்கலகங்களில்ல, நோய்க்கிருமிகள்
புதிய மனிதரின் கையில் அழிய வேண்டிய விகாரங்கள்
முட்களை விதைக்கு முன் உழவுயந்திரங்கள் அவர்களைக்
களையட்டும்
விஷேசமாக ஒதுக்கப்பட்ட மன்றங்களில்
மக்கள் களிப்பை அனுபவிக்கட்டும்
தனியார் கம்பனிகளை அவர்கள் தம் உடைமையாக்குவர்
மக்கள் நீதிமன்றங்களில் நியாயமானோர் மகிழ்வு
பெறுவர்
பெரும் நகரச் சதுக்கங்களில் நாம்
புரட்சியின் ஆண்டு நிறைவுகளைக் கொண்டாடுவோம்
இருக்குங் கடவுள் பாட்டாளிகட்குரியவர்

---

† புழுக்கள்: கியூபாவின் புரட்சியையடுதது வெளியேறி அமெரிக்காவுக்கு ஓடியவர்களைக் குறிக்கும் சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்கச்சுக்களின் விலை

புரட்சி பற்றி என் மருமகள் ஒருத்தி முறைப்படுகிறாள்
ஏனெனில் மார்க்கச்சுக்களின் விலை அதிகம்
எனக்கு முலைகள் கொண்டிருந்து பழக்கமில்லை
ஆனாலுங் கச்சுக்கள் இல்லாமல் முலைகள் சமாளிக்கும்
என நினைக்கிறேன்
என் நண்பன் ரஃபாயெல் கொர்டோவா
எஸ்கிபுலாஸ் கிராமத்தின் அருகே வாழ்கிறான்
வீதி வழியே பல மரண ஊர்வலங்கள்
சிறிய சவப்பெட்டிகளுடன்
ஒவ்வொரு மத்தியானமும்
நாலு, ஐந்து, எட்டு மரண ஊர்வலங்கள் என்று
எனக்குச் சொல்லியிருக்கிறான்.
முதியோர் இவ்வளவுக்கு அடிக்கடி மரிப்பதில்லை
சில காலம் முன்பு எஸ்கிபுலானின் பிரேதப் பெட்டிக்
கடைக்காரன்
அவனிடம் வந்தான்
"வைத்தியரே எனக்கு உங்களிடம் உதவி வேண்டும்
எனக்கு இப்போது மரணங்கள் இல்லை"
முன்னாட்களில் மலிவான மார்க்கச்சைகளிருந்தன
இப்போது எஸ்கிபுலாஸீல் மரண ஊர்வலங்கள் மிகக்
குறைவு
நீயே சொல்லு எது பரவாயில்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5வது தோத்திரம்

ஓ தேவனே என் சொற்களைக் கேளும்
என் முனகல்களைக் கேளும்
என் ஆட்சேபத்தைக் கேளும்
ஏனெனில் நீர் சர்வாதிகாரிகளுடன் சினேகமான
கடவுளோ

அவர்களது அரசியலை ஆதரிப்பவரோ
அவர்களது பிரசாரத்தாற் பாதிக்கப்பட்டவரோ அல்ல,
நீர் சண்டியர்களுடன் இணங்குபவரும் அல்ல

அவர்களது பேச்சுக்களிலோ
பத்திரிகை அறிக்கைகளிலோ நேர்மை இல்லை
யுத்த உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டே
தம் உரைகளிற் சமாதானம் பற்றிப் பேசுகின்றனர்
சமாதான மாநாடுகளிற் பேசிக்கொண்டே
இரகசியமாகப் போருக்கு ஆயத்தமாகின்றனர்
இரவிரவாக அவர்களது பொய் சொல்லும் வானொலி
இரையும்

அவர்களது மேசைகள் மீது பாதகத் திட்டங்களும்
கொடிய நடவடிக்கைகளும் அடுக்கப்பட்டுள்ளன
ஆயினும் நீர் என்னை அவர்களின் திட்டங்களினின்று
காப்பீர்

அவர்கள் துப்பாக்கி வாய்களாற் பேசுவர்
அவர்களது ஒளிரும் நாக்குகள் துப்பாக்கிச் சனியன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ தேவனே அவர்களை அழியும்
அவர்களது அரசியலை முறியடியும்
அவர்களது அறிக்கைகளைக் குழப்பும்
அவர்களது வேலைத்திட்டத்தை கவிழும்
எச்சரிக்கைச் சங்கின் வேளையில் நீர் என்னுடனிருப்பீர்
குண்டு விழும் நாளில் நீர் என் புகலிடமாயிருப்பீர்
அவர்களது பொய்யான விளம்பரங்களையும்
அரசியற் பிரச்சாரத்தையும் நம்பாதவர்களை
ஆசீர்வதிப்பீர்
கவச வாகனங்கள் போன்று
உம் அன்பினாற் சூழுவீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# மரியா யூஜெனியா ப்ராவோ

(Maria Eugenia Bravo)
(சிலே நாட்டவர் இப்போது
இங்கிலாந்தில் உள்ளார்)

## புகலிடங்களும் தோல்விகளும் பற்றி

இல்லை. 'சேனா'வின் கஷ்ட காலங்களோ
சிருஷ்டிக்கப்பட்ட யுத்த ஆலோசனைச் சபைகளின்
கடுமையான திடீர் விசாரணைகளோ இல்லை.
இல்லை. என் தோளிற் தாக்கிய குருட்டுத் துவக்கோ
விசாரணையின் பயங்கரக் கரும் முகமூடியோ
விளையாட்டரங்கங்களின் கருக்கலான நரகமோ
அவற்றின் அச்சுறுத்தும் கர்ச்சனைகளோ
என்னை தோற்கடிக்கவில்லை.

இல்லை. நம்மை வாழ்வினின்று துண்டாடும்
யன்னலின் இரும்புச் சட்டங்களோ
நம் வீட்டின் மீதான கண்காணிப்போ
களவான அடியெடுப்போ
பசியின் ஆழமான வாய்க்குட் சறுக்கியமையோ இல்லை.

இல்லை. என்னைத் தோற்கடித்தது என்னுடையதல்லாத
வீதி
அவசரமாக ஏற்பாடு செய்த வகுப்பிற் கற்ற இரவல்
மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தோற்கடித்தது என்னுடையதல்லதான
தனிமையான நிச்சயமற்ற நெட்டாங்கு எண்:
கிறீனிச் (Greenwich)
பூஜ்ய நெட்டாங்கு,
வெறுமைக்கு அருகே.

என்னைத் தோற்கடித்தது அந்நிய மழையும்
சொற்களின் மறப்பும்
தடுமாறும் ஞாபகமும்
தூரத்து நண்பர்களும்
நான் காத்திருந்து
வராத கடிதங்களை நனைத்த
நம்மிடையிலான கொடிய சமுத்திரமும்.

என்னைத் தோற்கடித்தது தினந்தினமும்
'ஜெனிங்ஹம் வீதி'யில் ஏங்குவதும்
'எலிஃபன்ற் அன் காஸில்' இல்
மூடுபனிக் கீழ் மனம் உழைவதும்
'லண்டன் பிரிஜ்' மீது விம்மி அழுவதும்.
நான் கடுமையான காலண்டரினால்
படிப்படியாகத் தோற்கடிக்கப் பட்டேன்;
மண்டே-திங்களுக்கும் ட்யூஸ்டே-செவ்வாய்க்கும்
இடையே ஒரு அந்நியனாய்ச் சுருங்கினேன்.

**என்னைத் தோற்கடித்தது**
உன் மென்மை இல்லாது போனதுதான்.
**என்** நாடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# ஹோர்ஹெ ஸல்காடோ றோச்சா

(Jorge Salgado Rocha)
(சிலே நாட்டவர்
இங்கிலாந்தில் வாழ்கிறார்)

UNIVERSITY OF PERADENIYA
11-7-1995
LIBRARY

## செப்டெம்பர் நாலாந் திகதி

துப்பாக்கிச் சனியன்போல நீண்ட தினம் அது
நமது இறுதி நம்பிக்கை என்ற குடாவில்
நங்கூரம் பாய்ச்சிய போர்க்கப்பல் போல
மிரட்டும் தினம் அது.

ஐயங்களும் அச்சங்களும் ஆயுதங்களும் இரத்தஞ் சிந்தலும்
மக்களின் முடிவற்ற பொறுமைக்கு நடுவே
பயங்கரமாக உசும்பும் சாம்பல் ஹெல்மெற்களும்
கொண்ட தெளிவான உலர்வான தினம் அது
செப்டெம்பர் நாலாந் திகதி
ஜனநாயகத்தின் தினம்.

பொறுப்பேற்றலின்
தடுப்புக்களின், எதிர்ப்புப் பாடல்களின்,
வெடிப்புக்களின், சூடுகளின், கைதுகளின்,
குண்டுதாக்கி வீரிடும் உடல்களின்
தினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு
'நமது நேசத்துக்குரிய நாடு' எனக்
கொடுங் கோலர் கூறும் வெறிதான ஏளனத்தை
எதிர்க்கத் துணியும் அளவுக்குப்
பசியும் சமாதானமும் நீதியும் விடுதலையும்
ஆயுதமாக ஏந்தி இருந்ததாய்
ஒப்புக் கொள்ளுமாறு
எத்தனை பேர் உசுப்பி எழுப்பப்பட்டனர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# அல்ஃப்ரெடோ கொர்டால்

(Alfredo Cordal)

(சிலே நாட்டவர்,
இங்கிலாந்தில் வாழ்கிறார்)

## நமது மக்கள்

உங்களது இலட்சியத்தினால் நன்கு அறியப்பட்ட
சிறைக்கூடத்தில் வாழும் எங்கள் சனங்களே
இம் மண்ணிற் போல் நட்சத்திரங்களிலும்
உங்கள் கனவு நனவாகுக
உங்கள் விடுதலை நடந்தேறுக
உங்கள் ஏக்கத்துக்குரிய எதிர்காலமாக
புலம் பெயர்தலைவிடச் சிறைவாசத்தை விரும்பினீரென
நாம் நினைவில் உள்ளோம் ஆதலால்
நமது சுதந்திரத்தை மன்னிப்பீராக
நம்மை விரக்திக்குள்
நம்மைப் பிரித்து நமது தொடருகிற போராட்டத்தை
மறிக்கும் தீமையினின்று நம்மை ரட்சிப்பீராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## மஹ்முத் தர்வீஷ்
(Mahmud Darwish)
(பலஸ்தீனத்தவர்)

### அலையும் கிற்றார் இசைஞன்

அவனொரு ஓவியன்
ஆனால்
வழமையாய்
ஓவியங்கள்
வாசல்களைத் திறப்பதுமில்லை
அவற்றைப் பிளப்பதுமில்லை.
நிலவின் முகத்தினின்று
மீன்களை விலகச் செய்வதுமில்லை

(கிற்றார்க்கார நண்பனே
தூரத்து யன்னல்களிடம்
என்னைக் கொண்டுபோ)

அவனொரு கவிஞன்
ஆனால்
ஒரு கப்பற்தளத்தினின்று
ஜாஃபா*வைக் கண்டதும்
அவனது கவிதை
அவன் நினைவில் உலர்ந்து போனது

* Jaffa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கிற்றார்க்கார நண்பனே
கவில வர்ணக் கண்களிடம்
என்னைக் கொண்டுபோ)

அவன் ஒரு படைவீரன்
குண்டுச் சிதறல்கள்
அவனது இடது முழங்காலை
நொறுக்கின
அவனுக்கு
மேலுமொரு பதவி உயர்வும்
மரத்தாலான காலுங் கொடுத்தனர்

(கிற்றார்க்கார நண்பனே
துயில்கின்ற தேசத்துக்கு
என்னைக் கொண்டுபோ)

நாளை இரவு
படைவீரரின் கைஒப்பங்களைச் சேர்க்க
எல்லாரும் செல்கையில்
கிற்றார் இசைஞன் வருகிறான்

நாம் காணமுடியாத இடத்தினின்று
கிற்றார் இசைஞன் வருகிறார்
சாட்சிகளின் தினத்தைச்
சனங்கள் கொண்டாடுகையில்
அம்மணமாக
அல்லது தன் உள்ளாடையுடன்
கிற்றார் இசைஞன் வருகிறான்

கிற்றார் இசைஞன் வருகிறான்
கிட்டத்தட்ட எனக்கு அவனைத் தெரிகிறது
அவனது கிற்றார் நரம்புகளில்
குருதி மணக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தெருவாலும்
அவன் நடப்பது
எனக்குக் கிட்டத்தட்டத் தெரிகிறது

"இதோ பார்
இது மரத்தாலான கால்
கேள்
இது மனிதத் தசையின் இசை"
என அவன் உறுமுவது
எனக்குக் கிட்டத்தட்டக் கேட்கிறது

## தூரத்து இலையுதிர் காலத்தில் ஒரு மழைத்தூறல்

தூரத்து இலையுதிர் காலத்தில் ஒரு மழைத் தூறல்
பறவைகள் நீல நிறம், நீல நிறம்
பூமி ஒரு பெருவிருந்து
விமான நிலையத்தின் மேலாய் ஓர் மேகமாய்க்
கிடக்க விரும்புகிறேன் என்னாதே.
ஒரு புகையிரதத்தின் யன்னலூடு
விழுந்த என் தேசத்தினின்று
நான் வேண்டுவதெல்லாம்
என் அன்னையின் கைக்குட்டையும்
புதியதொரு மரணத்தின் காரணங்களுமே.

விசித்திரமான இலையுதிர்காலத்தின் ஒரு மழைத்தூறல்
யன்னல்கள் வெள்ளை நிறம், வெள்ளை நிறம்
சூரியன் அந்திநேரத் தோட்டந்தோப்பு
நான் ஒரு தோடம்பழத்தைத் திருடினேன்
கத்திகளையும் வானம்பாடிகளையுங் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தேசத்தினின்று
நான் வேண்டுவதெல்லாம்
என் அன்னையின் கைக்குட்டையும்
புதியதொரு மரணத்தின் காரணங்களுமாக இருக்க
என் உடல் விட்டு ஏன் விலகி ஓடுகிறாய்?

சோகமான இலையுதிர் காலத்தில் ஒரு மழைத்தூறல்
வாக்குறுதிகள் பச்சைநிறம், பச்சை நிறம்
சூரியன் சேற்றாலானது.
"மல்லிகையைக் கொல்லுகையில் உனைக் கண்டேன்"
என்னாதே

ஆ, அஸ்ப்ரினும் மரணமும் விற்பவனே
என் முகம் ஒரு மாலைப்பொழுது போலிருந்தது.
என் மரணம் ஒரு கர்ப்பம்
தூரத்தே இருப்போரின் பேச்சை யெல்லாம்
மறந்த என் தேசத்தினின்று
நான் வேண்டுவதெல்லாம்
என் அன்னையின் கைக்குட்டையும்
புதியதோர் மரணத்தின் காரணங்களுமே.

தூரத்து இலையுதிர் காலத்தில் ஒரு மழைத்தூறல்
பறவைகள் நீலநிறம், நீலநிறம்
பூமி ஒரு பெருவிருந்து.
பறவைகள் மீளாத ஒரு காலத்துக்குப் பறந்துவிட்டன.
நீ என் நாட்டை அறிய விரும்புகிறாய்?
நம்மிடையே என்ன உள்ளது?
என் தேசம்
விலங்கு பூட்டிய நிலையின் ஆனந்தம்
தபாலில் அனுப்பிய முத்தம்
என்னைச் சாகடித்த என் தேசத்தினின்று
நான் வேண்டுவதெல்லாம்
என் அன்னையின் கைக்குட்டையும்
புதியதொரு மரணத்திற்கான காரணங்களுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

## ஸமி அல் கஸிம்

(Samih-al-Qasim)
(பலஸ்தீனத்தவர்)

### கைவிடல்

நான் அவளைக் கண்டேன்
நான் அவளைச் சதுக்கத்திற் கண்டேன்
நான் அவளைச் சதுக்கத்திற் குருதிசொட்டக் கண்டேன்
நான் அவளைச் சதுக்கத்திற் கொலையுண்ணக் கண்டேன்
நான் அவளைக் கண்டேன்—நான் அவளைக் கண்டேன்

இவளது பாதுகாவலன் யாரென்று
அவன் கத்தியபோது
நான் அவளை அறிவேன் என்பதை மறுத்தேன்
நான் அவளைச் சதுக்கத்தில் விட்டுச்சென்றேன்
நான் அவளைச் சதுக்கத்திற் குருதிவழிய விட்டுச்
சென்றேன்
நான் அவளைச் சதுக்கத்திற் தடுமாற விட்டுச்
சென்றேன்
நான் அவளைச் சதுக்கத்திற் சாக விட்டுச் சென்றேன்
நான் அவளை விட்டு......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரயாணச் சீட்டுக்கள்

நீர் என்னைக் கொல்லும் நாளிற்
சமாதானத்திற்கும்
வயல்கட்கும் மழைக்கும்
மாந்தரின் மனச்சாட்சிக்குங்
கொண்டுசெல்லும் பயணச் சீட்டுகளை
என் சட்டைப் பையிற் காண்பீர்.
அவற்றை வீணாக்காதீர்.

## நண்பகலில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம்

நான் ஒரு மரம் நட்டேன்
அதன் கனியை வெறுத்தேன்
அதன் தண்டை விறகாக்கினேன்
ஒரு குழல் செய்தேன்
அதில் ஒரு மெட்டிசைத்தேன்

குழலை நொறுக்கினேன்
கனியை இழந்தேன்
மெட்டை இழந்தேன்
மரத்திற்காக வெதும்பினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழிந்த உதடுகள்

மரித்த வானம்பாடியொன்றன் கதையை
உனக்குச் சொல்ல விரும்புகிறேன்
கதையை உனக்குச் சொல்ல—
அவர்கள் என் உதடுகளைக் கிழியாது விட்டிருப்பின்

## ஒரு நகரின் கதை

நீல நகரொன்று
நிதமும் கடைக்கு வருகின்ற
உல்லாசப் பயணிகட்காக ஏங்குகிறது

இருண்ட நகரொன்று
சிற்றுண்டிச்சாலைகளைத் துப்பாக்கிகளுடன் துழாவும்
உல்லாசப் பயணிகளை வெறுக்கிறது

## நான் ஒரு பண்டமான விதம்

அவர்கள் என்னை ஒருமுறை கொன்றனர்
பின் என் முகத்தைப் பலமுறை அணிந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரின் மைந்தர்

அவனை
அவனது திருமண இரவிற்
போர்முனைக்குக் கொண்டு போயினர்.

ஐந்து வருட இன்னல்கள்—

சிவப்பு ஸ்றெச்சத்தில் அவன்
திரும்பிவந்த தினத்தில்
அவனது பிள்ளைகள் மூவர்
துறைமுகத்தில் அவனைச் சந்தித்தனர்.

## சுவர்க் கடிகாரம்

எனது நகர் இடிந்தது
கடிகாரம் சுவரில்
எனது அயல் இடிந்தது
கடிகாரம் சுவரில்
எனது சதுக்கம் இடிந்தது
கடிகாரம் சுவரில்
எனது வீடு இடிந்தது
கடிகாரம் சுவரில்
சுவர் இடிந்தது
கடிகாரம்—
ஓடியவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதேசத்தில் மரிக்கும் ஒருவனது மரணசாசனம்

தழலென்னுங் கண்ணாடிகளில்
வளவையும் பாலத்தையும்
பொன்னான புல்வெளிகளையும்
நான் காணுமாறு
தீயை மூட்டு.
படுகொலைகள் நிகழ்ந்த நாளில்
என் கண்ணீரை
அயற் நாக்குக்களால்
அயற் காற்றுக்களாற்
குதறப்பட்ட குருவிபோன்ற இதயத்துக்குரிய
உன் சகோதரியின் சடலத்தை நான் காணுமாறு
தீயைமூட்டு.
படுகொலை நிகழ்ந்த நாளில்
உன் சகோதரியின் சடலத்தையும்
ஊதுவத்தித் தட்டமாக நிலவையும்
வெள்ளைவிரிப்பாக மல்லிகைப் பந்தரையும்
நான் காணுமாறு
தீயை மூட்டு.
நான் மரிப்பதை நான் காணுமாறு
தீயை மூட்டு.
என் தவிப்பு உன் ஒரே முதுசம்.
மல்லிகையின் முன் என் தவிப்பு
ஒரு சாட்சியாக மாறுகிறது.
நிலவு
சாட்சியாக மாறுகிறது.
நீ காணுமாறு தீயை மூட்டு.
தீயை மூ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோளங்கதிருக்கும் ஜெருஸலெம் ரோஜா முள்ளுக்குமிடையிலான உரையாடல்

(காட்சி: மத்தியத்தரைக் கடலின் கிழக்குக் கரையில் ஒரு வயல்)

சோளங்கதிர்: என் காலம் முடியுமுன் என்னைக் கொல்லாதே.

ஜெருஸலெம் ரோஜாமுள்: சும்மா கொல்வதுதான் என் ஒரே தொழில்

சோ: ஆனால் உன் அழகிய மலர்
தேன்...

ஜெ: என் தடையிலா ஆசை
ஒரு பாதை...அதன் முடிவு உன் மரணம்

சோ: உன் சோகமான மலர்களுடன்
உன் சாபக்கேடான ஆசையின் இருளுடன்
நீ விரும்பியவாறே வாழ்ந்து சா
வாழ்ந்து சா...ஆனால் என்னை விடு

ஜெ: அது நம் விதி...நீ வாழ நான் சாக வேண்டும்
அல்லது நான் வாழ நீ சாக வேண்டும்

சோ: வயலில் நம் இருவருக்கும் போதிய இடமுண்டு

ஜெ: அது நம் விதி அயலவனே
அது நம் விதி

[நெருப்பு வருகிறது. அச்சம் துள்ளி எழுகிறது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ, ஜெ: நெருப்பே நம்மைக் கொல்லாதே
நாம் இளையோர், அழகியோர், ஒன்றாக
வளர்ந்தோர்
எம்மைக் கொல்லாதே
எம்மைக் கொல்லாதே

(சாம்பல். சோளங்கதிரும் ஜெருஸலெம் ரோஜா
முள்ளும் அடிவானில்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடோனிஸ்

(Adonis)

(ஸிரியா நாட்டவர், லெபனானில் வாழ்கிறார்)

## கோபுரம்

ஒரு அயலவன் வந்தான்
கோபுரம் அழுதது;
அவன் அதை வாங்கி உச்சியிலே
ஒரு புகைபோக்கியை வைத்தான்.

## அக்கினி விருட்சம்

கசங்கிய இலைகளின் குடும்பமொன்று
ஒரு சுனையருகே விழுந்தது
அவை கண்ணீர்த்தேகத்தை வாட்டின
நீரிடம்
அக்கினி ஏட்டை வாசித்தன
என் குடும்பம் எனக்காகக் காத்திருக்கிவில்லை.
அவர்கள்
நெருப்பையோ அடையாளத்தையோ
விட்டுச் செல்லவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறவை

ஸினின் குன்றின் மீது
சமாதானத்திற்காக ஒரு பறவை
அழைத்திடக் கேட்டேன்.

அதன் பாடல்கள்
நகரின் கடுங்குளிரை
க்ஷவர அலகுகள் போல்
வெட்டிச் சென்றன.

## இலையுதிர்காலத்திற்கு ஒரு கண்ணாடி

இலையுதிர் காலத்தின் சவத்தைச் சுமந்தபடி
பெண்ணொருத்தி போவதை நீ பார்த்தாயா?
தன் முகத்தை நடைபாதையில் தேய்த்தபடி
மழையின் இழைகளால்
பெண்ணொருத்தி
ஆடை நெய்வதை நீ பார்த்தாயா?
மனிதர்.
நடைபாதை மீது
சுட்டெரித்த கரித்துண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபதாம் நூற்றாண்டுக்கு ஒரு கண்ணாடி

ஒரு சிறுவனின் முகத்தைத் தாங்கிய சவப்பெட்டி
ஒரு பசுவின் வயிற்றின் மேல் எழுதிய புத்தகம்
ஒரு மலருள் மறைந்திருக்கும் காட்டு விலங்கு
ஒரு பித்தனின் சுவாசப் பையால்
மூச்சு விடும் பாறை
இவ்வளவே
இது தான் இருபதாம் நூற்றாண்டு

## தூக்கிலிடுவோனுக்கு ஒரு கண்ணாடி

நீ ஒரு கவிஞனென்றா சொன்னாய்?
நீ எங்கிருந்து வருகிறாய்? உன் சருமம் அருமையானது.
தூக்கிலிடுவோனே, நான் சொல்வது கேட்கிறதா?
இவனது தலையை நீயே வைத்துக்கொள்.
ஆனால் இவனது சருமத்தைச் சிராய்க்காமற்
கொண்டுவா
இவனது சருமம் எனக்குப் பெறுமதி வாய்ந்தது.
இவனைக் கொண்டுபோ.
உன் வெல்வெற் சருமம்
என் கம்பளமாகும்.
நீ ஒரு கவிஞனென்றா சொன்னாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவலைகள் (ஒரு சொப்பனம்)

பிறந்த மேனியராய் வந்தனர்
கன்னமிட்டு வீடு புகுந்தனர்
குழியொன்றைத் தோண்டினர்
குழந்தைகளைப் புதைத்துப் போயினர்

## பொற்காலம்

"அலுவலரே, இவனைக் கொண்டுபோய்—"
"ஐயா, எனக்காகத் தூக்குமேடை
காத்திருப்பது தெரியும்.
ஆயினும் நான் என் அக்னியை வழிபடுங் கவிஞன்
மட்டுமே.
அதைவிட, நான் கொல்கொதாவை* நேசிக்கிறேன்''

''அலுவலரே, இவனைக் கொண்டுபோம்!
இவனிடஞ் சொல்லும்: 'அதிகாரியின் பாதணி
உன் முகத்தைவிட அழகானது'"

பொன்னாலான பாதணியின் யுகமே
நீயே அழகிலும் லீலையிலும் அதியுயர்ந்தனை.

* Golgotha, கல்வாரி, ஜெருஸலேம் அருகே யேசு சிலுவையிலறையப்பட்ட இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

## முஹம்மத் அல்-மகூத்

(Muhammad al-Magut)

(ஸிரியா தேசத்தவர்)

### அனாதை

ஓ
அந்தக் கனா...
அந்தக் கனா...
என் கட்டித் தங்கக் கார் நொறுங்கியது
சிற்கள் நாடோடிகள் போற் சிதறின
வசந்தத்தின் இரவொன்றிற் கனாக் கண்டேன்
நான் விழித்தபோது
என் தலையணை மேல் மலர்கள் கிடந்தன
ஒரு முறை கடல் பற்றிக் கனாக் கண்டேன்
காலையிற்
செதில்களும் சிப்பிகளும் என் கட்டிலைபோர்த்தன
விடுதலை பற்றிக் கனாக்கண்ட போதோ
காலைப்பொழுதின் சோதி வளையம் போல்
வாள்கள் எனது கழுத்தை நோக்கின...
இனிமேற்
துறைமுகங்களிலும் புகையிரதங்களிலும்
என்னைக் காண மாட்டீர்
என் வாய் நதிகளைத் தொட்டவாறு
என் விழிநீர் கண்டங்கட்குக் குறுக்கே பாய
ஐரோப்பாவின் தேசப்படங்கள் மீது
பொது நூலகங்களில்
தூங்குவதைத் காண்பீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்வெளி நிலையமொன்றில்
## ஒரு அரபுப் பயணி

விஞ்ஞானிகளே தொழில் நுட்ப வல்லுனர்களே,
வானவெளிசெல்ல எனக்கோர் பயணச் சீட்டுத் தருவீர்:
வருந்தும் என் நாட்டின் சார்பாக
அவளது முதியோர் விதவையர் குழந்தைகள் சார்பாக
வந்துள்ளேன்.
வானவெளிசெல்ல எனக்கோர் பயணச்சீட்டுத் தருவீர்
என்னிடம் பணம் இல்லை...கண்ணீர் மட்டுமே.

எனக்கு இடமில்லையா?
விளிம்பிலோ அல்லது தளத்திலோ
நிற்க என்னை அனுமதிப்பீர்.
நான் ஒரு விவசாயி, அது எனக்குப் பழக்கம்.
ஒரு தாரகையை நான் வருத்தேன்
ஒரு மேகத்துக்கும் வசை மொழியேன்.
நான் வேண்டுவது
வானத்தை விரைந்து எட்டிக்
கடவுளின் கையில் ஒரு சாட்டையைக்
கொடுக்க மட்டுமே.
அவர் எம்மை ஒரு புரட்சிக்குக் கிளறிவிடக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபாற்காரனின் அச்சம்

சகலவிடத்தும் உள்ள கைதிகளே
உங்களிடமுள்ள அனைத்தையும் என்னிடம் அனுப்புவீர்
அச்சங்களை, ஓலங்களை, அலுப்பை

சகல கடலோரங்களதும் மீனவர்களே
உங்களிடமுள்ள அனைத்தையும் என்னிடம் அனுப்புவீர்
வெற்று வயிறுகளை வயிற்றுக் குமட்டலை

ஒவ்வொரு நாட்டினதும் விவசாயிகளே
உங்களிடமுள்ள அனைத்தையும் என்னிடம் அனுப்புவீர்
மலர்களைக், கந்தல்களை
வெட்டுண்ட மார்புகளை
கிழிக்கப்பட்ட வயிறுகளை
பிய்க்கப்பட்ட நகங்களை
எனது முகவரிக்கு......
உலகின் எந்தச் சிற்றுண்டிச் சாலைக்கேனும்
எந்த வீதிக் கேனும்

நானொரு பெரிய கோப்புத் தயாரிக்கிறேன்
மனிதரது அவஸ்தை பற்றி.
பசித்தோரது உதடுகளும்
காத்திருப்போரது கண்மடல்களும்
அதில் ஒப்பமிட்ட பின்
கடவுளிடம் சமர்ப்பிக்க

சகலவிடத்துமுள்ள கேடுண்ட மானிடரே
நான் அதிகம் அஞ்சுவது யாதென்றாற்
கடவுளுக்கு எழுத வாசிக்கத் தெரியாமல் இருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸாம் மஹ்ஃபூஸ்
(Issam Mahfouz)
(லெபனான் தேசத்தவர்)

### முடிவு

என் கதையின் முடிவு
மேசை மீது
மீந்த உணவு போற்
குளிரானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15

# உன்ஸி அல்-ஹஜ்

(Unsi Al-Haj)

(லெபனான் தேசத்தவர்)

## நினைவு

இந்த
நீண்ட
இரவு!
தீக்கோழிகள் என்னைப் புதைக்கின்றன.

## நாட்களும் ராட்சதரும்

தாம் ஒரு புத்தகத்தில் வந்து முடிவோமென்று தெரியாமல் நட நடவென்று நடந்த நாட்களின் நினைவை நேசிக்கிறேன். பனி போர்த்திய மணி நேரங்களில் வேலை செய்வதையும் தாம் ஒரு புத்தகத்தில் வந்து முடிவோமென்று தெரியாமல் நடநடவென்று நடந்த ராட்சதர்களையும் நேசிக்கிறேன்.

வரவுள்ள நாட்களின் நினைவை நேசிக்கிறேன்—
தற்கால நாட்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளிர்காலம்

வரட்சிக் காலத்தின் ஓநாய்கள் போன்று நாம்
எங்கும் முளைத்தோம்
மழையை உவந்தோம்
இலையுதிர்காலத்தை உவந்தோம்
ஒரு நாள்
இலையுதிர்காலத்து இலையொன்றைத் தபால்தலையாக்கி
வானத்துக்கு ஒரு நன்றிக் கடிதத்தை
அனுப்பவும் நினைத்தோம்
மலைகள் மறைந்தொழியும் எனவும்
கடல்கள் மறைந்தொழியும் எனவும்
நாகரிகங்கள் மறைந்தொழியும் எனவும்
காதலே நிலைக்கும் எனவும்
நாங்கள் நம்பியும் இருந்தோம்
சடுதியாய் நிகழ்ந்தது நம் பிரிவு
அவள் நீளமான சோபாக்களை விரும்பினாள்
நான் நீளமான கப்பல்களை விரும்பினேன்
அவள் சிற்றுண்டிச்சாலைகளிற் குசுகுசுத்துப்
பெருமூச்செறிய விரும்பினாள்
நான் தெருக்களிற் குதித்துக்
கூச்சலிட விரும்பினேன்
இத்தனைக்கும் பின்
எனது கைகள் அண்டத்தின் அகலம் விரிந்து
அவளுக்காய்க் காத்திருக்கின்றன......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

## கலில் ஹாவி

(Khalil Hawi)

(லெபனான் தேசத்தவர்)

### லெபனான்

சுவர்களை நோக்குஞ் சுவர்களாயிருந்தோம்
பேசுவது வேதனையாயிருந்தது
நம்மிடைத் தூரத்தை உணர்வது வேதனையாயிருந்தது
துன்பம் தொண்டையை இறுக்கப்
பேசுவது வேதனையாயிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## ஸமி மஹ்தி
(Sami Mahdi)
(ஈராக் தேசத்தவர்)

### பெய்ரூத்

அப்போ இதுதான் பெய்ரூத்,
கூட்டத்தில் இழந்து
நொறுங்கிய முகங்களை முறைத்தவாறு.
அப்போ இதுதான் பெய்ரூத்,
எத்தனையோ காதலரையுடைய ஒருபெண்.
அவள் சுடப்பட்டபோது
கொலையாளி கேட்பாரின்றி வெளியேறினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
11-7-1995

# 18

## ஸலா·ஃ நியாஸி
(Sala Niazi)
(ஈராக் தேசத்தவர், லண்டனில் வாழ்கிறார்)

### மூன்றாமுலகம்

ஒரு சதவீதம்
ஆறு சதவீதம்
பத்து சதவீதம்
படங்களிலும் பத்திரிகைகளிலும் அரசு முறுவலித்து,
அச்சகங்களில் அமர்ந்து கொள்கிறது
அஞ்சற்தலைகளில் தன் நாட்களைப் பொறித்து
வெற்றிகளைப் பதிவுசெய்கிறது
பழிவாங்கல்களைப் பதிவுசெய்கிறது.

இன்றைய கவிஞன் கணக்குகளை வாசிப்பதில்லை,
அவனது நாளை, இன்று.
தனக்குப் பசித்தால் ஆட்சியாளரின் பாதையை
மறிக்கிறான்.
தனக்குக் குளிர்ந்தாற் கொடியைத் திருடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

## தௌஃபிக் ஸய்யாட்
(Thowfik Zayyad)
(பலஸ்தீனத்தவர்)

### கவசவாகனங்கட்கு முன்னம்

என் யன்னல் விளிம்பின் மேல்
ரோஜா இதழ்கள் மலர்ந்தன
முந்திரிகைக் கொடியினின்று
ஒரு பசுநிழல்,
ஒரு பச்சை ஏணி எழுந்தது
என் வீடு
ஒரு கற்றை சூரியக் கதிர்கள் மேற் சாய்ந்து
குளித்தது
இதெல்லாம்
அவர்களது கவச வாகனங்கள் வருமுன்னம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்கள் அறிவார்கள்

என் நாட்டை ஆயிரம் பேர் கைப்பற்றினரென
அவர்கள் அறிவார்கள்: ஆயினும்
அந்த ஆயிரம் பேருமே
புயற்காற்றிற் பனிபோன்று
கரைத்தழிந்தனரெனவும்
அவர்கள் அறிவார்கள்.

## ஸல்மான்

தன் முற்றத்து மண்ணில்
ஒருகுண்டு அவனைப் புதைக்குமுன்
ஸல்மான் எமக்குச் சொன்னான்:
"பிரியமானவர்களே
நெடுங்காலமாக நாம்
நாம் விருப்பியவாறு வாழவில்லை
இப்போது வாழ்கிறோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கேயே இருப்போம்

லிடாவில்[1], றம்லாவில்[2], ஜிலியில்[3]
நாம் தொடர்ந்து இருப்போம்
உம் மார்புகள்மேல் மதில்கள்போல்
உம் தொண்டைகளிற்
கண்ணாடிச் சிராய் போல
கற்றாழை முள் போல
உமது விழிகளில்
மணற் காற்றுப் போல.

உம் உணர்வுச்சாலைகளில் பீங்கான் கழுவி
உம் மதுக்கடைகளிற் பானம் வழங்கி
உம் சமையலறை நிலங்களைத் துடைத்து
உம் நீலப் பற்களினின்று
எம் பிள்ளைகட்குத் தீனி பறித்தெடுக்க
நாம் தொடர்ந்தும் இருப்போம்.
உம் மார்புகள் மேல் மதில்கள் போல்

இங்கேயே நாம் இருப்போம்
எங்கள் பாடல்களைப் பாடுவோம்
சினமிகுந்த வீதிகட்குச் செல்வோம்
மானத்துடன் சிறைகளை நிறைப்போம்.

லிடாவில், றம்லாவில், ஜிலியில்
நாம் தொடர்ந்து இருப்போம்
அத்திமர நிழலுக்கும்
ஒலிவ் நிழலுக்கும் காவலிருப்போம்
ரொட்டிமாவில் யீஸ்ற் போன்று
நம் பிள்ளைகள் மனதிற் புரட்சியை விளைவிப்போம்.

([1]LIDDA, [2]RAMLA, [3]GALILEE)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

## ஸா'டி யூஸுஃப்

(Saa' di Yusuf)

(ஈராக் நாட்டவர்,
இப்போது சைப்ரஸில் வாழ்கிறார்)

### நீர்

வானம்பாடி அருந்துகிறது.
நக்ஷத்திரம் அருந்துகிறது.
கடல் அருந்துகிறது.
குருவியும் வீட்டுச் செடியும் அருந்துகின்றன.
ஆனால் ஸப்ராவின் குழந்தைகளோ
எறிகணைகளின் புகையை அருந்துகின்றனர்.

---

* லெபனனில் ஸப்ரா, சட்டிலா பலஸ்தீன அகதி முகாம்களில் 1982இல் நடத்தப்பட்ட கொலைகளைக் குறிக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனர்ஜென்மம்

ஒளியில்லாததோர், வைத்தியசாலையில்
தாகத்தால் ஒரு பையன் மரித்தான்
அவசரமாக அவனைப்புதைத்துக்
குழப்பத்தோடு அகன்றனர்
இப்போது அவன் தன் வதங்கும் விழிகளைத் திறக்கிறான்
தன் அகண்ட விழிகளைத் திறந்து தோண்டுகிறான்.
பூமிக்குள் ஆழமாய்த் தோண்டுகிறான்.

## துப்பாக்கிகள்

வைகறையிற் துப்பாக்கிகள் உறுமுகின்றன.
புகைபோன்று கடல் நகரைச் சூழுகின்றது,
வைகறையிற் துப்பாக்கிகள் உறுமுகின்றன.
பறவைகள் அஞ்சுகின்றன.
விமானங்கள் வந்து விட்டனவா?
வெற்றுமனையொன்றிற்
செடிகள் மௌனிக்கின்றன.
பூச்சட்டி நடுங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹம்ரா * இரவு

நீண்ட தெருவில் ஒரு மெழுகுவர்த்தி
வீடுகளின் துயிலில் ஒரு மெழுகுவர்த்தி
பயப்படும் கடைகட்காய் ஒரு மெழுகுவர்த்தி
போறணைகட்காய் ஒரு மெழுகுவர்த்தி
வெறும் அலுவலகத்தில் நடுங்கும்
பத்திரிகையாளனுக்காய் ஒரு மெழுகுவர்த்தி.
போராளிக்காக ஒரு மெழுகுவர்த்தி
நோயாளிகளைப் பராமரிக்கும்
பெண்வைத்தியருக்காக ஒரு மெழுகுவர்த்தி.
காயப்பட்டோருக்காக ஒரு மெழுகுவர்த்தி
வெறும் பேச்சுக்காக ஒரு மெழுகுவர்த்தி
படிக்கட்டுகட்காக ஒரு மெழுவர்த்தி
அகதிகள் நிறைந்த
ஹோட்டலுக்காக ஒரு மெழுகுவர்த்தி
பாடகருக்காக ஒரு மெழுகுவர்த்தி
தங்கள் மறைவிடங்களில் இருக்கும்,
ஒலிபரப்பாளர்கட்காக ஒரு மெழுகுவர்த்தி
ஒரு போத்தல் நீருக்காக ஒரு மெழுகுவர்த்தி
காற்றுக்காக ஒரு மெழுகுவர்த்தி
நிர்வாணமான ஒரு மனையில் இருக்கும்
காதலர் இருவருக்காக ஒரு மெழுகுவர்த்தி
வீழுகின்ற வானத்துக்காக ஒரு மெழுகுவர்த்தி
ஆரம்பத்துக்காக ஒரு மெழுகுவர்த்தி.
முடிவுக்காக ஒரு மெழுகுவர்த்தி
கடைசி அறிக்கைக்காக ஒரு மெழுகுவர்த்தி.
மனச்சாட்சிக்காக ஒரு மெழுகுவர்த்தி
என்கைகளில் ஒரு மெழுகுவர்த்தி.

( *ஹம்ரா, பேய்ரூத்தின் பகட்டான ஒரு பகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

## வொலே ஸொயின்கா

(Wole Soyinka)

(நைஜீரியா தேசத்தவர்)

### மூலதனம்

பூமி போஷித்து
மனிதன் பேணிக்காத்த
அந்த நுண்ணுயிராயிருக்க முடியாது.
ஒரு நாள் நான் ஒரு நுண்ணுயிர் அருவியை
மகிழ்வான திருப்தியில் வாயகண்ட பீலிகளினின்று
மிகையான தானியத் தாரை பாய்வதைக்
கண்டேன்.
தானியங்கள் பாடின என்று
சத்தியமாய்ச் சொல்வேன்.

அந்தக் கொள்கை, கவனமான முடிவு,
உலகச் சந்தைக்கு
ரொட்டி மா பொங்குவதற்காகவோ
என் வாழ்வின் கனல்களைச்
சாம்பராக்கி
மாசுபட்ட கடல்களில்
யீஸ்ற் படுக்கைகளை அமைக்கிறது?
இருக்க முடியாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

## டெனிஸ் ப்றூட்டஸ்

(Denis Brutus)
(தென் ஆப்பிரிக்கர்)

### எது முக்கியமானதென்றால்....

ஷார்ப்வில் 1பற்றி முக்கியமானது ஏதெனில்
அங்கு எழுபதுபேர் இறந்தது அல்ல:
நிராயுதபாணிகளாய் தற்பாதுகாப்பற்றவர்களாய்ப்
பின்வாங்குகையில்
அவர்கள் முதுகிற் சுடப்பட்டதுமல்ல

நிச்சயமாக,
தாயொருத்தியின் முதுகைக் கிழித்து
அவள் கையில் தூக்கியிருந்த குழந்தையை ஊடுருவிக்
கொன்ற
கனமான குண்டுமல்ல

ஷார்ப்வில்லின்
முதுகினில் குண்டுபாய்ந்த நாளை
நினைவு கூர்க.
ஏனெனில் அது வேறெதையும் விடத்தெளிவாக
ஒடுக்குமுறையையும்
சமுதாயத்தின் தன்மையையும் உருவகப்படுத்துகிறது
அதுவே அதியுதாரணமான சம்பவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் காதோடு காதாகச் சொல்வதை
இனவேறுபடுத்தல்
உறுமும் துப்பாக்கிகளுடன் பிரகடனம் செய்கிறது
செல்வந்தர் விரும்பி விழையும் இரத்தத்தை
தென்னாபிரிக்கா புழுதியிற் சிந்துகிறது

ஷார்ப்வில்லை நினைவுகூர்க
முதுகிற் குண்டு பாய்ந்த நாளை நினைவு கூர்க

விடுதலைக்கான தணியா ஆர்வத்தையும்
நினைவு கூர்க
இறந்தோரை நினைவு கூர்க
மகிழ்வுறுக

+(21-3-1960இல் தென் ஆபிரிக்க நிறவெறி அரசு ஷார்ப்வில் எனும் நகரில் நடத்திய துப்பாக்கிச் சூட்டு வெறியாட்டத்தில் 70பேர் இறந்தனர் தென்னாபிரிக்க இனவேறுபடுத்தலின் கொடுமையை அதிர்ச்சி தரும் முறையில் உலகுக்கு உணர்த்திய முதலாவது சம்பவம் அதுவே எனலாம்.)

## சிறைவாசம்

பிசுபிசுக்கும் சீமெந்து
நம் வெறுங்கால்களை உறுஞ்சும்

ஒழுகும் மஞ்சள் மின்குமிழ்
ஈரமான சாம்பல்நிறச் சுவரை ஒளியூட்டும்.

மூன்று மணிச் சாமப் பனியில் நனைந்த
அரிந்த புல்
கரிதாய் ஒளிரும் விளிப்புகளுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொங்கிறீற்மேல் அமர்ந்தபடி
இனிப்பில்லாத களியை
நமது விரல்களால்
வாய்களுட் திணிக்கிறோம்.

பின் நிமிர்ந்து உழைக்கிறோம்
வரிசையில் நிற்கிறோம்.

உறுதி மிக்கோராய் நம்மை வலுவூட்டுகிறோம்
அல்லது நம் விதியிதென்று விறைத்துப் போய்
நம்மைப் பற்றிய ஒரு படிமத்தை ஏற்போம்.

தலை நரைத்த சிறை மேலதிகாரி சொல்வார்
"இதுகளுடன் செலவிட
எனக்கு நேரமில்லை
இதுகளெல்லாம் எலிகளிலும் கீழானதுகள்
இதுகளைச் சுடத்தான் இயலும்"

தலைக்கு மேலாகத் தாழ்வாக
மருங் தென் சிலுவையின் தாரகைகளின்
விசாலமான உறைந்த மினுமினுப்பு.

நமது குதிக்கால்களிலும்
மணிக்கட்டுகளிலும் கிடந்து
நம்மைச் சோடிசேர்க்கும்
விலங்குகள் கலகலக்கும்
மினுமினுக்கும்.

நாம் நகரத் தொடங்குகிறோம்—
அலங்கோலமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராப் பாடல் நகரம்

நன்றாகத் தூங்கு, என் அன்பே, நன்றாத் தூங்கு:
ஓய்வற்ற துறைமுக மேடை மீதாகத் துறைமுக விளக்குகள் மின்னும்
சுரங்க வீதிகளூடு பொலிஸ் கார்கள் கரப்பான்கள் போல் விரையும்;
சேரிகளின் கிறீச்சிடும் இரும்புத் தகடுகளினின்று
புழுப்பிடித்த பழந்துணி போல் வன்முறை வீசப்படும்
காற்று உலுப்பிய மணியின் ஒலிபோல அச்சம் நிறைந் திருக்கும்;
நீண்ட நாளின் சினம் மணலினின்றும் பாறையினின்றும் மூசும்
என்றாலும், மூச்சுவிடும் இந்த இரவுக்காவது
என் மண்ணே, என் அன்பே, நன்றாகத் தூங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

## அகொஸ்தின்ஹோ நேற்றோ
(Agostinho Neto)
(அங்கோலா தேசத்தவர்)

### மேலை நாகரிகம்

மண்ணுட் புதைக்கப்பட்ட
கப்புக்களுக்கு ஆணியறையப்பட்ட
தகரத் தகடுகளே வீடுகள்

கந்தல்கள் சில
அருகாமையின் காட்சியை முழுமை செய்யும்

வெடிப்புக்களூடு சாய்ந்து வருஞ் சூரியன்
பன்னிரண்டு மணி நேர
அடிமை உழைப்பின் பின் வரும்
வீட்டுக்காரனை வரவேற்கும்

கல்லுடைத்தல்
கல் நகர்த்தல்
கல்லுடைத்தல்
கல் நகர்த்தல்
இதமான காலம்
ஈரமான காலம்
கல்லுடைத்தல்
கல் நகர்த்தல்

முதுமை முன்கூட்டியே வருகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நன்றியுணர்வுடன்
பசியால் மரிக்குங் கால்
இருண்ட இரவு வேளைகளில்
ஒரு பாய் போதுமானது.

## இரவு

உலகின் இருண்ட மூலையில்
ஒளியின்றி, உயிரின்றி
நான் வாழ்கிறேன்.

வாழும் விருப்புடன்
வழி தேடி
வடிவமற்ற என் கனவுகட்குச் சரிந்தவாறு
அடிமைத்தனத்துள் இடறியவாறு
வீதிகளில் நடக்கிறேன்
—இருண்ட பகுதிகள்
இழிநிலை உலகங்கள்
மன உறுதி நீர்த்து
மனிதர்
பண்டங்களுடன் குழப்பப்படும் இடங்கள்

புதிரும் பயங்கரமும் நிறைந்த
தெரியாத
ஒளியற்ற வீதிகளிற்
தடுமாறி நடக்கிறேன்,
பிசாசுகளுடன் கை கோத்து.
இரவும் இருட்டானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24

## ஜே.ஆர்.டி.ஏ. டுப்ரேகா
(J.R.D.A. Duprega)

### ஐரோப்பியரே போய் வருக

போய்வருக ஐரோப்பியரே
என்னளவில், மனத்தாங்கலற்ற எனக்கு
ஒரு மனவருத்தமுமில்லை
போய் வருக, ஒவ்வொருவரும் அவரவர் ஊருக்கு
ஒருவித பம்மாத்துமின்றிப்
போய் வருக, எம்மை நீவிர் இனியுங் குழப்பாத வரை
நீவிர் இன்றியமையாதவர் என எவரும் கருதினால்
அவர் நும்மைப் பின் தொடர்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமின் கஸ்ஸாம்

(Amin Khassam)

(கென்யா தேசத்தவர்)

### உருமாற்றம்

இரண்டு மணி நேரம் முன்பு
ஆறுதலாக நடந்து வந்தான்
சாதாரண மனிதன்
ஒரு நுழைவுச் சீட்டை வாங்கினான்
இரண்டு மணி நேரம் முன்பு
க்யூ வரிசையில் அனாமதேயனாகக்
கவனிப்பாரின்றிக்
கதிரையில் அமர்ந்தான்

இப்போது
கண்ணிற் போர் வெறி மின்ன
ஆணவத்துடன்
துள்ளுகிறான்
அழகு
நாசுக்கு
வியப்பான பார்வைகளால் அலுங்காமை
வலிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்வதை உணர்கிறான்
அவன் கமக்கட்டுக்குள் கிடக்கும்
தட்டைத் தொப்பியும் உணர்கிறது

குரூரமான உதடுகள்
இரக்கமின்மையின் முத்திரை பதிந்தன

கவனம்
**007**
தான் விரும்பியவாறு
எங்கோ எவ்வாறோ எவரையோ
கொல்ல அனுமதியுடையவன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26

# ஸிஃபோ ஸெம்பம்லா

(Sipho Sepamla)
(தென்னாபிரிக்கர்)

## தீர்ப்புத் தினத்தன்று[1]

கறுப்பு மனிதர்கள் பிறவிப் பாடகர்கள்
கறுப்பு மனிதர்கள் பிறவி ஓட்டக்காரர்கள்
கறுப்பு மனிதர்கள் சமாதானப் பிரியர்கள்
நம்மை முட்டாள்களாக்கும் கட்டுக்கதைகள்

ஷம்பேன் [2] குமிழ்களுடன் நாம் உறிஞ்சப்பட்டுள்ளோம்
மூச்சடைக்கும் தூசியை நாம் அறிந்துள்ளோம்
அவமானத்தின் வேதனையால் நாம் துடிதுடித்துள்ளோம்

பாடகர்கள்
ஓட்டக்காரர்கள்
சமாதானப்பிரியர்கள்

நம்முட் சீறும் புயலை எவரும் கண்டதில்லை
நம் அடி நிலையை நாம் தொட்டுவிட்டோமென அறிய
எவர்க்கும் அக்கறையில்லை

சிரிப்பது வேதனையிற் குமுறுவது என்றாயிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடகர்கள்
ஓட்டக்காரர்கள்
சமாதானப்பிரியர்கள்

மண்ணாங்கட்டி

இரவுப் பிராத்தனைகளில் [3] நாமெல்லாரும்
பாடுவோமென்றே அஞ்சுகிறேன்

எனக்குத் தெரிய நாமெல்லாரும் நம் பாதுகாப்புக்காகவே
ஓடுவோம்
எந்தச் சமாதானம் இன்னமும் விரும்பப்படுமென்றுதான்
எனக்குத் தெரியவில்லை

---

[1] Judgement day - கிறிஸ்தவர்களது நம்பிக்கையில் மனித இனத்தின் முடிவில் மனிதர்களது மோட்ச—நரகங்கள் தீர்மானிக்கப்படும் நாள்.

[2] Champagne வெற்றியைக் கொண்டாட அருந்தப் படும் மது.

[3] Night vigil-துக்கமான நிகழ்வுகளையொட்டி இரவிரவாக நிகழும் பிரார்த்தனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகரிகம், ஆஹா!

முதற்தடவையாக ஒரு அத்திப்பழத்தைத் தின்றபோது
ஈடன் தோட்டத்தை நினைத்தேன்
முதற்தடவையாக கடவுளின் சித்திரத்தைக் கண்டபோது
ஒரு வெள்ளையனை நினைத்தேன்
பூமியில் சைத்தானை முதற்தடவையாகச் சந்தித்தபோது
ஒரு கறுப்பனை நினைத்தேன்
உண்மையாகச் சொல்லப் போனால்
இது பண்டு [1] கல்வி மட்டுமல்ல
வெள்ளை நாகரீகமென்பார்களே அதில் ஒரு பகுதி

[1] **Bantu:** தென்னாபிரிக்க நீக்ரோ தேசிய இனத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஃபீலிக்ஸ் ம்ன்தாலி

(Felix Mnthali)
(ஸிம்பாப்வே தேசத்தவர்)

### நவகொலனித்துவம்

எல்லாவற்றிலும் முக்கியமாய்த்
தராதரங்களை வரையறுப்பீர்,
விழுமியங்களை எடுத்துரைப்பீர்,
வரையறைகளை வகுப்பீர்,
எல்லைக்கோடுகளைத் திணிப்பீர்
நும்மிடம்
விண்வெளியிற் சஞ்சரிக்கும் கலங்கள் இல்லாவிடினும்
பெறுமானமுள்ள ஆயுதங்கள் இல்லாவிடினும்
உலகைநீவீர் ஆள்வீர்

நீவிர் என்ன பாட்டை இசைப்பினும்
அவர்கள் ஆடுவார்கள்
நீவிர் என்ன குப்பையைக் கொட்டினாலும்
அவர்கள் சுவைப்பார்கள்
அவர்களது அரிய கனிப்பொருட்களையும்
அவர்களது வளமான வனங்களையும்
நீவிர் விரும்பிய வண்ணமே
பொறுக்கி எடுக்கலாம்

ப—6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அஞ்சி நடுங்கி
நும்மிடம் வருவார்
ஏனெனின்
நீவிர் செய்த விதிகட்கமைய
விளையாட்டு ஆடப்படுகிறது
எனவே, நீவிர் வெல்லும் போதே
விளையாட்டு ஆடப்படும்.

எல்லாவற்றிலும் மேலாக
விழுமியங்களை எடுத்துரைப்பீர்
தர ,தரங்களை வகுப்பீர்
மூன்றாம் உலகம்
நும்மடியில் விழுவதை
உட்கார்ந்து பார்ப்பீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க்றிஸ் ஃபான் வைக்

((Chris Van Wyk)

(தென்னாபிரிக்கர்)

### காரணம்

கொலைகாரர்களும் கள்வர்களும்
எளிதாகவே
சிலைகளாகி
நினைவுச் சின்னங்களாகிறது
ஏனென்றால்
அவர்களது கணகள்
ஏற்கனவே கருங்கற்கள்
அவர்களது இதயங்கள்
கற்பாறைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வோட்டும் வேட்டும்

வோட்டு
அதென்னவெனில் வாக்களித்தல்.
இதோ பார் பெரியதொரு பெட்டி.
நீளமாக அதில் ஒரு துவாரம்.
ஓம், உண்டியல் போன்று.
உனக்கு தெரிவுகள் உண்டு.
கொடூரமான அரசாங்கம் வேண்டுமா?
அல்லது நல்ல அரசாங்கமா?
சோம்பேறி அரசாங்கமா?
அல்லது செயற்படும் ஒன்றா?
மக்களை யார் பராமரிப்பது என்று
முடிவுசெய்யச்
சதுரமான காகிதத் துண்டில்
நீ ஒரு X போட வேண்டும்.
அதற்கு முன்னர் நீ
உன்னை அடையாளம் காட்ட வேண்டும்.
அது சுலபம்.
அடையாள அட்டை மட்டுமே தேவை.
அது பாஸ் புத்தகம் போல இருக்கும்.
வித்தியாசம் ஏதென்றால்
அதை வீட்டில் விட்டு வந்தாயெனில்
அகப்பட மாட்டாய்
அது வோட்டு.
இனி வேட்டு.
ஆ, இப்போது, உனக்குக் கட்டாயமாக
வேட்டு என்னவென்று தெரிந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29

## ஷோர்ஜி றெபலோ

(Jorgi Rebalo)
(மொஸாம்பிக் நாட்டவர்)

### தம்பி, வா எனக்குன் வாழ்க்கையைச் சொல்

தம்பி, வா, எனக்குன் வாழ்க்கையைச் சொல்
வா,
உன் உடலில் எதிரி பதித்த
போராட்டச் சின்னங்களைக் காட்டு

வா,
'அவர்களின் உடைமையான
என் மண்ணைக் காத்ததற்காய்
அவர்கள் நெரித்த கைகள் இதோ'
என்று சொல்

11-7-1995

'ஆக்கிரமித்தோர் முன்
குனிய மறுத்ததால்
வதையுண்ட உடல் இதோ'

'எனது மக்களின் விடுதலையை
இசைக்கத் துணிந்ததால்
புண்ணான வாய் இதோ'

தம்பி, வா, எனக்குன் வாழ்க்கைச் சொல்
நீயும் உன் தந்தையரும் முன்னோரும்
காதலுக்காய்ப் படைக்கப்பட்ட நிழலற்ற இரவுகளில்
நிசப்தமாய்க் கண்ட
விடுதலைக் கனவுகளைச் சொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா,
அந்தக் க்னவுகள்
யுத்தமாய்
வீரர்களின் ஜனனமாய்
மண்ணின் மீட்சியாய்
மைந்தரைப் போராட அனுப்ப
அஞ்சாத அன்னையராய்
ஆகின என்று சொல்.

வா, தம்பி, இதையெல்லாம் எனக்குச் சொல்.

பின்னர் தான்
குழந்தைகளும் அறியும் எளிய சொற்களாய்
காற்றென்ன
ஒவ்வொரு வீட்டினுள்ளும் புகுந்து
நம் மக்களது ஆன்மாக்கள் மேற்
சுடு செந்தணலென்ன வீழும்
சொற்களால் வடிப்பேன்.

நமது மண்ணிற்
துப்பாக்கிக் குண்டுகளும் மலரத் தொடங்குவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30

## ஓமர் பா
**(Omar Ba)**
(மொரிட்டானியா தேசத்தவர்)

### நீதி வழங்கப்படுகிறது

உதைக்கப்பட்டுப்
பொருட்கள் களவாடப்பட்டு
ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டாய்?
அப்போ, சாட்சிகள்?
மண்ணின் துணிக்கைகள் எத்தனையோ
அத்தனை:
காடியெல் ஒருவன்
ந்துல்லா
ந்தியாம் பெலெ ஒருவன்
பறவைகள் கூடச் சாட்சி கூறும்...
என்றாலும்
குடித்தலைவன்
நீதிபதியாகத் தன் மகனையும்
மொழிபெயர்ப்பாளனாக மருமகனையும்
வைத்திருப்பதை மறந்து விட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழக்கமான மாடுகள்

உன் பங்கில்
நியாயமுள்ளதென்கிறாய்?
குடித்தலைவன் மந்தையில்
காணும் அம் மாடுகள்?
அவற்றின் ஞானஸ்னானப் பேரால்
நான் அழைத்தால்
அவை வரும்.

## மாட்டுப் படைவீரன்

ஏழு பருவங்கள்
கண்ட ஒரு மாட்டுக்குப்
படைவீரனாகி
ராணுவ சேவையில்
உன் இடத்தைப் பிடிக்க
முடியும்.
தெரியுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெயொராபெற்ஸே க்கோஸிற்ஸே

(Keorapetse Kgositse)
(தென் ஆபிரிக்கர்)

## மண்டேலாவின் போதனையுரை

மனிதத்தன்மை அழிக்கப்பட்டோர் ஆசிர்வதிக்கப்
பட்டோராவர்.

அவர்களது பொறுமையை விட
அவர்கட்கு இழக்க எதுவுமில்லை
பொய்த் தேவுகள் என்னுள் இருந்த கவிஞனைக்,
கொன்றன. இப்போது
கலைநுணுக்கத்துடன்
நான் புதைகுழிகள் தோண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32

## காஒபெர்டியானோ டம்பரா
(Kaoberdiano Dambara)
(கினி தேசத்தவர்)

### கறுப்பனின் தீர்ப்பு

வெள்ளையன் அவனது முகத்தை நோக்கினான்
என் கரிய சகோதரன் உசும்பவில்லை

வெள்ளையன் கத்தினான், கர்ச்சித்தான் அவனை அடித்து
உதைத்தான்
என் கரிய சகோதரன் நடுங்கவில்லை

கோபத்துடன் உலர்ந்த கண்ணீரினதும் வலுவினதும்
தழல்கள் அவனது விழிகளில் எரிந்தன
என் கரிய சகோதரன் உசும்பவில்லை, பதில்பேசவில்லை,
நடுங்கவில்லை

அவனது விழிகளில் வலிமையின் தழல் எரிந்தது
அவ்வலிமையைக்
கறுப்பன் மட்டுமே அறிவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒஸ் வால்ட் ம்புயிஸெனி ம்ட்ஷாலி

(Oswald Mbuyiseni Mtashi)
(தென் ஆபிரிக்கர்)

## துணிதுவைக்கும் பெண்ணின்பிரார்த்தனை

அவளது கைகளைப் பார்
அவிந்து, முடிச்சு முடிச்சாகத். தோல் தடித்து.
அவளது முகத்தைப் பார்
உப்புநீரில் ஊறிய பயற்றந் தோல் போல.

எண்ணற்ற ஆண்டுகளாகத்
துரைத்தனத்தில் சுகபோகத்தால் அழுக்கேறிய
தன் எசமானின் துணிகளைத் துவைத்து உழைத்தாள்

உறைபனி கோலமிட்ட காலைப் பொழுதுகளில்
வெய்யில் எரித்த பிற்பகல் வேளைகளில்
அவள் முணுமுணுக்காமல் முறிந்தாள்

ஒரு நாள், அவள்
சோர்வினால் மயங்கி விழுந்தாள்.
அவளது வாய் உளறலைக் கக்கும் ஒரு
நுரைக்கும் சுனையாயிற்று
''நல்ல தெய்வமே! அன்புத் தெய்வமே!
ஏன் நான் இவ்வாறு வதை படுகிறேன்?
எத்தனை காலம் நான் வருத்தப் பட்டுள்ளேன்?
சொல்வாய் தெய்வமே, எனக்குச் சொல்வாய் தெய்வமே"
என்று கத்தினாள்

"குழந்தாய்! அன்புக் குழந்தாய்,
பொன்னிழைத்த பாவத்தில் வாழ்வோர்க்காக
வேதனைப் படு
ஜின் நிறைந்த கிண்ணத்தில் நீந்துவோருக்காகப் பாடுபடு"
என்பதைக் கேட்டாள்

''நன்றி தெய்வமே! நன்றி தெய்வமே,
இந்த வேலையை நான் ஏன் செய்ய வேண்டுமென
இனியொரு நாளுங் கேளேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34

## கத்தார்

(தெலுங்குக் கவிஞர்)

### லக்ஷ்மம்மா

மல்லிகைப் பந்தலின் கீழ் குந்தியிருப்பவளே
ஏ லக்ஷ்மம்மா
இத்தனை சோர்வுடனே
தோன்றுவதேனடியோ
உன் வேய்ந்த குடிசைதனைக்
காற்றுத் தூக்கி எறிந்தாச்சு
பனிக்குளிர்க் காலம்
பாய் ஒன்றுனக்கில்லை
இழமையின களையை
உன் முகம் இழந்தாச்சு
ஏ லக்ஷ்மம்மா
நடுநடுங்குகுறாய்-கடுங்குளிரினிலே
உன் பிள்ளை உயிருடனோ
இல்லை-இறந்தானோ

தஸரா உத்ஸவமும் வந்தது
ஆயினும் நீ
கொண்டாடிடவில்லை
தீபாவளி வந்தது
தீபம் உனக்கில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராத்திரி வந்தது
விரதம் பேணுகிறாய்
உன் வாழ்க்கை முழுவதுமே
சிவராத்திரி என்றாச்சு
ஏ லக்ஷ்மம்மா
உன் வாழ்க்கை முழுவதுமே
அமாவாசை என ஆச்சு

எத்தனை நாள் அழுவாய்
புலம்பி எதனை வென்றிடுவாய்
உன் சோதர சோதரியர்
செஞ்சேனையிலே இணைந்தார்
தங்கள் அரிவாளை
அவர்கள் கைகளிற் தூக்கி விட்டார்
தீட்டிடுவாய் நீயும்
ஏ லக்ஷ்மம்மா
உந்தன் மகனுடனே நீயும் இணைந்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35

## மாஓ சேதுங்
(Mao Zedung, சீனா)

### ஒரு கவிதை

விடைகூறலில் நாம் கைகள் அலைக்கிறோம்
நீ உன் துயர்கள் உரைக்கையில் உனது
சோக வதனம் என்பாற் திரும்பும்,
நெஞ்சம் உருக.
விழியுடன் புருவம் உன்துயர் விளக்கும்,
ஆனால் நீயோ
வழியநிறைந்த விழியின் வெதுநீர்
தன்னை மறித்தாய்.
தப்பபிப்பிராயம் நமது கடைசி
மடல்களில் இருந்தது.
மூடுபனியும் முகில்களும் இப்போ
ஒதுக்கப் பட்டன,
ஒருவர் மற்றவர் இதயம் தன்னை
மண்மேல் நாங்கள் இருவரே அறிவோம்.
மனிதனை வாட்டுவ
தென்னவென்று விண்ணும் அறியுமோ?

கிழைவாயிற் தொடங்கும் வீதி
கிடக்கும் விடியலில் உறைபனி மிகுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்பிறை நிலவு வானிற் தவழ்ந்து
நீர்க்குட்டைக்கு வெளிச்சமூட்டும்
தனிமையின் காட்சி
ஊதல் ஒன்றொலிக்கும், என்மனம் நொருங்கும்
இனிமேல் மண்ணின் முடிவுவரை நான்
தனித்தே செல்வேன்.
குன்லுன் மலையினோர் குத்துச் சரிவைப்
பிளப்பது போன்று,
அல்லது அண்டத்தூடோர் சூறைக்
காற்றெனப் பாய்ந்து
மனவேதனை எனும் நூற்சிக்கலை நாம்
துணித்திடவேண்டும்.
மீண்டும் அருகாய்ப் பறந்தவாறு
மேகங்களுடன் மேலே மிதப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36

## ஃபெங் ஷிஏ ஃபெங்

(Feng Zie-Feng, சீனா)

UNIVERSITY OF PERADENIYA LIBRARY 11-7-1995

### இரவு

மலைமுடிகளின்மேல் விழுந்தது இரவு.
எத்துணை பாரம்!
ஓசைஏதுங் கேட்கவில்லை.
என்றபோதினும்
எத்துணை பாரம்!
என்றும் நிமிர்வாய்,
என்றும்ஒதுங்கிப் பெருமிதமாக,
ஓங்கியுயர்ந்த பகோடா கூட,
அதிர்ச்சி கண்டது.

எதனையாயினும் பற்றிப்பிடித்துக்
காற்றில்எகிறி வீச எண்ணி,
"யன்னலின் வெளியே"
சினந்த கையினை நீட்டிடுகின்றேன்;
ஆனால் வடக்கு வானமுகட்டில்
நட்சத்திரங்கள் மின்னுகின்றன!
உடனே என்கை பின்னுக்கிழுத்து
மேனி நிமிர்ந்தேன்,
ஏனெனில் வான் மீன்கள் எந்தன்
விழிகள்மீது குறிவைத்திருந்தன!
களங்கமின்றி ஒளிர்ந்தவாறு,
பளிங்குபோலவை தெளிவாயுள்ளன;
எந்தன் இதயமும் தெளிந்து ஒளிர்ந்தது;
விடியும் வரையில் அங்குநிற்றலே
எனது விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11-7-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

460800
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org